www.padippakam.com


பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

மார்ச் – ஏப்ரல் 2002



ஆமதாபாத்தில் பழிவாங்கும் வெறியில் கூச்சலிடும் ஒரு பஜ்ரங்தள் தொண்டர்



பிப்ரவரி 27 இரயில் படுகொலையை அடுத்து ஆமதாபாத்தில் நடந்த தாக்குதல்

(நன்றி - இந்தியா டுடே)

படிப்பகம்

www.padippakam.com

| *பெண் உரிமை* | உள்ளே . . . | பக்கம் |
|---|---|---|

2–2

மார்ச் – ஏப் 2002

*தனிச் சுற்றுக்கு மட்டும்*

**விலை**

ரூ. 5.00

ஆண்டு சந்தா

ரூ. 30.00

தொடர்புக்கு :

அஜிதா
658 (17/34
இராணி அண்ணாநகர்,
கே.கே.நகர்
சென்னை – 600 078

☞ பெண் உரிமைக்காக 3

☞ ஆனந்தி – நேர்காணல் 7

☞ மைய – மாநில நிதியறிக்கைகள் 11

☞ சகித்துக் கொண்டுதான் போகவேண்டுமா? 16

☞ மாதேஸ்வரன் மலையின் கண்ணீர் துளிகள் 20

☞ அருந்ததிக்கு நேர்ந்த கொடூரம் 23

☞ பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைச் சட்டம் 28

☞ எதிரொலிப்பு 30

☞ எங்கே பயணப்படுகிறது? 35

(மைய – மாநில நிதியறிக்கை என்ற கட்டுரையிலுள்ள ஓவியத்தை வரைந்தவர்
**மருது)**




படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

## அன்பார்ந்த நண்பர்களே!

குஜராத்தில் சபர்பதி இரயிலில் ஏறத்தாழ 50 பேர் படுகொலை! தொடர்ந்து முஸ்லீம் வீடுகள் சூறையாடல்! முஸ்லீம் மக்கள் வெட்டிக் கொலை, சித்ரவதை! பெண்கள் மானபங்கம்! இதன் தொடர்ச்சியாக அயோத்தியில் "பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோயிலை கட்டியே தீரவேண்டும்" என்று ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பஜ்ராங்தள் இந்துமத வெறியர்களின் வெறியாட்டம்! உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பின்னும் இராமர் கோயிலைக் கட்டவில்லையென்றால், உயிரை விடவும் தயாரென்று பரமஹம்சின் பித்தலாட்டம்! காஞ்சி மடத்து சங்கராச்சாரியாரின் வீராவேசம்! ஆட்சி அரியணையிலிருக்கும் பாசிச பி.ஜே.பி.யின் மௌன வெறியாட்டம்! என்று கடந்த ஒரு மாதமாக பல சம்பவங்கள் இந்தியாவையே குலுக்கி வருகின்றன.



பிப்ரவரி 27 அன்று, சபர்பதி எக்ஸ்பிரஸ் இரயிலில் ஏறிய 'கரசேவகர்கள்' முஸ்லீம் வியாபாரிகளிடம் திண்பண்டங்களை வாங்கிக் காசு கொடுக்க மறுத்துள்ளனர். கோத்ராவிலுள்ள பிலேயா குடிசைப் பகுதியில் இரயில் நின்றுக் கொண்டிருக்கையில் தண்டவாளத்தருகே துணி துவைத்திருந்த முஸ்லீம் பெண்ணை இரயிலுக்குள் இழுத்துள்ளனர். அபாய சங்கிலியைப் பிடித்திழுத்து இரயில் நிற்பதற்குள் கோத்ராவில் கற்கள், பெட்ரோல், மண்ணெண்ணெயுடன் காத்திருந்த ரவுடி கும்பல், இரயிலைத் தாக்கி, இரண்டு இரயில் பெட்டிகளுக்கு இடையே இருந்த ரப்பர் நடைப்பாதையை எரித்ததனால் 57 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக 'அவுட்லுக்', 'பிரண்ட்லைன்' விளாவரியாக விவரிக்கின்றன.

இக்கோர சம்பவத்திற்கு பின், பல மாதங்கள் முன்னரே அரசு ஆவணங்களிலிருந்து சேகரித்த முஸ்லீம் வீடுகள், ஹோட்டல்கள், ஷோ ரூம்கள் அனைத்தையும் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. வெறிக்கும்பல் சூறையாடியது. முஸ்லீம் கடைகளை தேர்ந்தெடுத்து அடித்து நொறுக்கியது. இதுவரை கண்டிராத அளவுக்கு பஞ்சமகால், பம்ராடா, பரூச், சூரத், கேதா, ஆன்ந்த், நாடியாட், சபர்கந்தா, பன்ஸ்கந்தா, ராஜ்காட், பவநகம், படன், மேக்சனா போன்ற பகுதிகள் சூறையாடப்பட்டன. 40 மசூதிகள் தரைமட்டமாக்கப்பட்டன. பஞ்சமகாலில், விஸ்வ இந்து பரிசத் பொதுக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கையில் "அனைத்து முஸ்லீம்களையும் துரத்தியடித்துக் கொல்லுங்கள்" என்ற அறைகூவலையே விடுத்தது!



படிப்பகம்

www.padippakam.com

பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி.யின் கொடூரத் தாக்குதலில் ஏறத்தாழ 1500 முஸ்லீம்கள் உயிரோடு கொல்லப்பட்டதாக தனியார் கணக்குச் சொல்கின்றது. அகமதாபாத்தில் மட்டும் 6,000 அகதிகள் இருப்பதாக தகவலுள்ளது. பத்ரவாடாவில் 9 வயது நூரெளடா அரிவாளால் கழுத்தில் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரின் தந்தை, ரசாகின் இரண்டு கை விரல்கள் துண்டாக்கப்பட்டு த்லையில் பலத்த காயங்களுடன் படுவேதனையாக உள்ளார். பதினெட்டு வயதான அப்சானா, வீட்டின் மீது மண்ணெண்ணெய் ஊற்றி, எரித்ததனால் குடும்பமே அழிந்துள்ளது. 'அவுட்லுக்குக்கு' அயூப் என்பவர் பேட்டி அளிக்கையில், "என்னுடைய 7 வயது மகனையும் 5 வயது மகளையும் என் கண் முன்னேயே எரித்தனர். என் குழந்தைகள் கண்ணை மூடுவதற்கு முன், என்னை பார்த்த பார்வை ஒன்றுதான், என்னை இப்பொழுது வாழ வைத்துள்ளது" என்று கதறி அழுகின்றார். இந்துவெறி கும்பல் பெண்கள், குழந்தைகளையும் கூட விட்டுவைக்கவில்லை. முஸ்லீம் பெண்கள் ஒவ்வொரு நொடியும் பாலியல் வன்முறை, சித்ரவதைக்கு இரையாகி வருகின்றனர். சலியா என்றொரு கர்ப்பிணி பெண்ணின் வயிறு கிழிக்கப்பட்டு மூன்று வயது முஸ்கன், ஆறு மாத சுபன் என்ற இரு மகன்களோடு உயிரோடு கொல்லப்பட்டார். (குமுதம் ரிப்போர்டர், பக்கம் 13).

வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். வானரப் படையின் இத்துணை கோரத் தாண்டவமாட்டத்தையும் பார்த்து குஜராத் போலீஸ் மௌனம் சாதித்தது. ஆனால், தற்காப்புக்காக போராடிய முஸ்லீம்களை சுட்டுக் கொன்றது. ஆட்சிப் பீடத்திலிருந்த பி.ஜே.பி. மோடி அரசு தன்னுடைய சகாக்கள் அறிவித்த அர்த்தாலுக்கு முழு ஆதரவளித்தது! காக்கிச் சட்டைகளும் காவிச் சட்டைகளும் கைகோர்த்துக் கொண்டு முஸ்லீம் மக்களை வீடு புகுந்து தாக்கியுள்ளனர். துப்பாக்கி சூட்டில் 70க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள் பி.ஜே.பி. மோடி அரசு, வி.எச்.பி., பஜ்ரங்தள் நடத்திய வெறியாட்டம் அரசு துணையுடனான கொலைப்படையின் திட்டமிட்ட இனப்படுகொலை நிகழ்ச்சி, இனஒழிப்பு என்பதை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. இதை முதலமைச்சர் மோடியின் அறிக்கையும், வி.எச்.பி துணை தலைவரின் அறிக்கையும் நிரூபிக்கின்றன.

"கோத்ரா போன்ற சம்பவங்கள் எதிர்வினையாற்றும், கொடூர தாக்குதல் நடந்துக் கொண்டிருக்கையில், 11 நாள் 72 மணி நேரம் மௌனம் சாதித்து அமைதியை கட்டிக் காத்ததேன்" முதலமைச்சர் நரேந்திர மோடியின் அறிக்கைகள் ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., இனப்படுகொலையை இன ஒழிப்பை நியாயப்படுத்தி, படுகொலை செய்யப்படுவதற்கு தானும் உடந்தையாக இருந்ததாக எவ்வித வெட்கமுமின்றி கூறுகின்றார். இந்த 'மக்கள் பிரதிநிதியின்' விசுவாசத்தை என்னவென்று சொல்ல?

அதேபோல், வி.எச்.பி. துணைத் தலைவர் ஹரேஷ்பாய் பட், "இந்துக்கள் அல்லாதோரின் கடைகள் மற்றும் ஏனைய உடைமைகள் நாசமாக்கப்பட்டன" "நாங்கள் திரிசூலம் போன்ற ஆயுதங்கள் வைத்திருப்பது சட்டப்பூர்வமானது" என்று கூறி இனப்படுகொலையை நியாயப்படுத்துகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

முதலமைச்சர் நரேந்திர மோடியின் இந்து மதவெறியாட்டம் தன் செயலை நியாயப்படுத்துவதில் மட்டுமே நின்றுவிடவில்லை! இந்த 'மக்கள் பிரதிநிதியின்' ஓரவஞ்சனை நஷ்டஈட்டிலும் அம்பலப்பட்டுள்ளது. கோத்ரா கலவரத்தில் இறந்தவருக்கு ரூ. 2,00,000/– நஷ்ட ஈடாம்! மதக்கலவரத்தில் இறந்தவருக்கு ரூ. 1,00,000/– நஷ்ட ஈடாம்! மோடியின் இச்செயல்பாடு வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போலுள்ளது! அதேபோல், வீடு, உடைமைகளை விட்டு அகதிகளாக வந்துள்ள முஸ்லீம் மக்களுக்கு இன்று வரை எவ்வித நிவாரண ஏற்பாடும் செய்ய மோடி அரசு மறுத்துள்ளது!

திட்டமிட்ட குஜராத் மதக்கலவரங்களில் தமக்குள்ள அசிங்கமான பங்கை மூடி மறைக்க அத்வானி–மோடி கும்பல் பாகிஸ்தானை நோக்கி விரல்களை நீட்டுகின்றன. ஒவ்வொரு குண்டு வெடிப்புக்கும், மதக் கலவரத்துக்கும் உண்மையான குற்றவாளிகள் இந்து பாசிச கும்பல்களான வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள். இதனை வளர்த்துவரும் ஆளும் வர்க்கங்கள் என்பதை மக்கள் சந்தேகமின்றி அறிவார்கள் என்பதை இந்த முட்டாள்களுக்கு தெரியாதோ?

பாராளுமன்ற எதிர்கட்சிகளோ, இந்த கொடூர சம்பவத்தை எதிர்த்து கிளர்ந்தெழாமல், வாஜ்பாய்–மோடியின் கொலை வெறியாட்டத்திற்கு முற்றுபுள்ளி வைக்க அணித் திரள்வதை விடுத்து, இந்து மதவெறியர்களுக்கு வால்பிடிக்கும் சாந்தமான கொள்கைகளையே பின்பற்றுகின்றன. 1992 பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், அதற்கு முன்பும் பின்பும் காங்கிரஸ் மதக்கலவரத்தை ஆதரித்து வந்துள்ளது.

இந்த மதக் கலவரம் கோத்ராவில் தற்பொழுது தற்செயலாக ஏற்பட்டதல்ல. 1948, 1960, 1980, 1990, 1992 பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், இங்கு முஸ்லீம் மக்கள் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவை பொறுத்தவரையில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு இடங்களில் மதக் கலவரங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இந்துமத வெறிக் கும்பல் சிறுபான்மை மக்களை உதைப்பது, உயிரோடு கொல்வது என்பது தினசரி நிகழ்ச்சிகளாகிவிட்டது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான குரூரமான வன்முறை செயல்கள் இந்தியாவை தவிர வேறெந்த நாட்டிலும் நடைபெற்றிருக்க முடியாது.

மதக்கலவரங்களால், நாடு பேரழிவுகளை பெருத்த நஷ்டங்களை இரத்தக் களறிகளை சந்தித்துள்ளது. ஆங்கிலேயர்களிடமிருந்து இந்திய ஆளும் கும்பலிடம் ஆட்சி கைமாறிய பின், மதக் கலவரங்கள் அடுத்தடுத்து பரவலாகவும், அதிக உயிர்களை பலிவாங்குவதாகவும், சித்ரவதைகளை துரிதப்படுத்துவதாகவும் மாறியுள்ளது.

மதக் கலவரங்கள் இந்து மதவெறி பி.ஜே.பி. கட்சி அரியணையில் ஏறியபின் அதிகமாயுள்ளன. பி.ஜே.பி. ஆளும் கும்பலின் அவர்களின் கொள்ளைக்காரர்களின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக கையறு நிலையில் நடத்தப்படும் சூதாட்டமே, இத்தகைய மதக்கலவரங்களுக்கு அடித்தளமாய் அமைகின்றது. உலகமயமாக்கலை நோக்கி இந்தியா தீவிரமாக முன்னேறிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கும் இத்தருணத்தில் தனியார்மயம், தாராளமயம் போன்ற மக்கள் விரோத கொள்கைகளால் பாதிக்கப்படும் மக்கள் வெகுண்டெழுந்து போராட்டங்களை மேற்கொள்கின்றனர்; மேற்கொள்ள இருக்கின்றனர். இந்த அரசியல் பொருளாதார சூழலில் ஆளும் கும்பல் மதவெறியை கையிலெடுத்துள்ளது. மக்களின் பொருளாதார நெருக்கடியிலிருந்து திசைதிருப்ப இந்துமதவாத பிரச்சாரத்தை வெளிப்படையாக செய்கின்றன. இந்திய சந்தையை நிறுவத் துடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் நோக்கமும் இந்து நிலவுடமை பாசிச சக்திகளின் நோக்கமும் ஒன்றோடு ஒன்றாகியுள்ளது.

மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து வளர்ந்துவரும் மக்கள் போராட்டங்களை ஒடுக்க பாசிச ஆயுதத்தை பி.ஜே.பி. கையலெடுத்துள்ளது. பாசிசத்திற்கு ஒரு சமூக அடித்தளத்தை உருவாக்க இந்துமதவெறி கும்பல், இந்து ஆதிக்க வெறியை தூண்டிவிட்டு இன்று பாசிச நிறுவனங்களை நிறுவ துடிக்கின்றன. 'இந்து, இந்தி, இந்தியா' என்ற தாரக மந்திரத்தை நிறுவுவதே தன்னுடைய இலட்சியமாக கொண்டுள்ள இன்றைய ஆளும் கூட்டம், 'இயன்றவரை தேவையான போதெல்லாம் மக்களை பிளவுப்படுத்து – தோதான நிலையில் பாசிசத்தை நிறுவு' என்று தங்கள் ஏகாதிபத்திய எஜமானர்களின் அடிப்படைக் கொள்கையை கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் நிலைநாட்டி வருகின்றது. இதன் தொடர்ச்சியே இன்றைய 'பொடா' சட்டம்! குஜராத்தில் மதக் கலவரம் ஓயவில்லை! அதற்குள் கூட்டு பாராளுமன்றத்தை கூட்டி 'பொடா'வை கொண்டு வந்துள்ளது பி.ஜே.பி! இதன் மூலம் தனக்கெதிரானவர் அனைவரையும் ஒழித்து கட்டிவிட்டு சர்வாதிகார பாசிச ஆட்சியை நிலைநிறுத்துவதில் தீவிரமாயுள்ளது. பகிரங்கமாக இராணுவ பயிற்சியுடன் சூலம் போன்ற ஆயுதங்கொண்டு இனப்படுகொலையை இன ஒழிப்பை குஜராத்தில் செய்துவரும் வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா அமைப்புகளை இந்த, பொடாவின் கீழ் தடை செய்ய மறுத்துள்ளது.

சமீபத்தில் நடந்து கொண்டிருக்கும் குஜராத் கலவரம் முதல் ஒவ்வொரு வகுப்புவாத சம்பவத்திலும் அரசின் பல்வேறு நிறுவனங்களும் – குறிப்பாக போலீஸ் படையும், அதிகார கும்பலும் இந்து பாசிசவாதிகளின் செயல்களுக்கு துணை போவது அம்பலமாகியுள்ளது. இவர்கள் மீது 'பொடா' சட்டம் பாயுமா என்ன?

இந்த கொடூரர்கள் செய்த அனைத்து வன்முறை நடவடிக்கைகளும் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. இந்த அதிகார கும்பல் கைது செய்யப்பட்டதற்கான வரலாறும் இல்லை! இவர்கள் செய்த பாலியல் வன்முறை, கொலை, கொள்ளை போன்ற பெரும் குற்றங்கள் கூட அலட்சியம் செய்யப்பட்டுள்ளன. இக்கலவரங்கள் மீதான விசாரணை குழு அறிக்கைகள் தூசு படிந்து கிடக்கின்றன.

எனவே நடந்து கொண்டிருக்கும் குஜராத் மதக்கலவரத்தில் ஈடுபட்ட, அவர்களுக்கு பக்க பலமாய் இருந்த மோடி, அத்வானி தண்டிக்கப்பட போராடுவோம்! வி.எச்.பி. பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். கொலைவெறி கும்பலை ஒழித்திட அணித்திரள்வோம்! வளர்ந்துவரும் இந்துமத பாசிச அபாயத்தை எதிர்த்து விழிப்போடிருப்போம்!

– ***ஆசிரியர்***



படிப்பகம்

www.padippakam.com

# ஆனந்தி - நேர்காணல்



ஆனந்தி விவசாய பெண்களை அணித்திரட்டும் புரட்சியே பெண்கள் இயக்கத்தில் கடந்த ஐந்தாண்டு காலமாக செயல்பட்டு வருகின்றார். விவசாய பெண்களின் உரிமைகளுக்காக, விடுதலைக்காக போராடி வரும் ஆனந்தியை தர்மபுரி காவல்துறை பொய் வழக்குகளில் கைது செய்தது. வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்ட ஆனந்தி, சிறைத்துறையின் அராஜகங்களை தட்டி கேட்டதற்காக பல்வேறு கொடூர சித்ரவதைகளை எதிர்கொண்டார். ஆனால், சிறைத்துறையின் திட்டமிட்ட சித்ரவதைக்குத் தளராமல் தொடர்ச்சியாக போராடி வெளிவந்துள்ள ஆனந்தி, பெண் உரிமைக்கு அளித்த பேட்டி பிரசுரிக்கப்படுகிறது.

28-01-2001 அன்று கியு பிரிவு இன்ஸ்பெக்டர் ஏகநாதன் தலைமையில் வந்த போலீஸ்படை என்னை தர்மபுரி மல்லிக்கோட்டையில் கைது செய்தது. சட்ட விரோதமாக என்னை கைது செய்தபோது, நான் முழக்கங்கள் எழுப்பினேன். என் தொண்டையை லத்தியால் குத்தினார்கள். என்னை சுட்டுத்தள்ளுங்கள் என்று குழறினேன். தடியடி செய்து வண்டியில் ஏற்றினார்கள்.

அங்கிருந்து அதியமான் போலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு சென்றார்கள். அங்கேயே இரண்டு நாட்கள் வைத்திருந்தார்கள். 30-01-2002 அன்று வேலூர் சிறையில் அடைத்தார்கள்.

சிறைக்குள் குருவம்மா வார்டனிடம் ஒப்படைத்தார்கள். சிறைக்குள் நுழைந்தவுடன் என்னடி தேவடியா ன்னு திட்ட ஆரம்பித்தார்கள். எதிர்த்து கேட்டதற்கு என்னை அடித்தார்கள். குருவம்மா, விஜயா சேர்ந்து என்னை செக் பண்ணணுமென்று நிர்வாணமாக்கினார்கள். வார்டன்கள் என்னையும், என்கூட கைதான சத்யாவையும் சிறையைப் பெருக்க சொன்னார்கள். தண்டனைக் கைதிகள் மட்டுமே பெருக்க வேண்டும் என்ற விதி இருப்பதை மீறி எங்களை கூட்ட சொல்வதை நாங்கள் எதிர்த்தோம். கூட்ட முடியாது என்றோம். நாங்கள் அரசியல் கைதிகள் எங்களை இப்படி வேலை வாங்குவது சட்டபூர்வமற்றது என்று நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தியபின்தான், எங்களை விட்டனர். அனைத்து ரிமாண்டு சிறைவாசிகளிடமும்



படிப்பகம்

www.padippakam.com

இவ்விசயத்தை எடுத்துக் கூறினோம். அவர்களும் கூட்ட மறுத்தனர் – நாங்கள்தான் பிரச்சனையை தூண்டி விடுகிறோம் என்று எங்களை தனிமைச் சிறையில் யாரோடும் தொடர்பில்லாமல் போட்டுவிட்டனர்.

சிறையில் உமி கல்லுடன் சோறு போடுவார்கள் கொஞ்சமா சோறு போட்டு அந்த சோறு கூட தண்ணியில் மிதப்படையும், கடலை சட்னி துளிதான் வைப்பாங்க. கேட்டால் காணிக்கை வார்டன்கள் செமத்தியா அடிப்பார்கள். இதை எதிர்த்து பாலக்கோடு கோர்ட்டில் சொன்னோம். சிறையிலிருந்து மனு அனுப்புங்கள் என்று கூறி நீதிபதி எங்களை அனுப்பிவிட்டாங்க. சிறையில் சாப்பாடு சரியில்லாததை ஏன் கோர்ட்டில் சொன்னீங்கன்னு வாசு வார்டன் எங்களை மிரட்டினான். நாங்கள் சிறைக்குள் வந்தவுடன் சூப்பரண்டு எங்களைக் கூப்பிட்டு எதுக்கு சிறைக்குள் நடக்கும் விசயத்தை கோர்ட்டில் சொன்னீங்கன்னு கடுமையா திட்டினாங்க. ஜெயில்ல நடக்கின்ற விசயத்தை எழுதக்கூடாது என்று சொல்லிட்டாங்க.

இந்த கொடுமையை எதிர்த்து நாங்பக உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தோம். பின்தான் எழுத பேப்பரும், பேனாவும் கொடுத்தாங்க. மார்ச் – 8 அன்று என்னை வார்டன் லில்லி முடியைப் பிடித்து இழுத்து அடித்ததைக் கண்டித்து மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தேன். சூப்பர்டண்ட் லில்லியும் மன்னிப்புக் கேட்டபின் நான் சாப்பிட்டேன்.

செப்டம்பர் –27 ரிமாண்டுக்கு போகும்போது அப்துல் ஜாபர் வண்டியில் அசிங்கமான கேசட்டைப் போட்டு என்னை கொச்சைப்படுத்தினான். அசிங்கமா என்னை கொச்சைப்படுத்தியவனை கண்டிக்கும்வரை சிறை வாசலிலேயே இருப்பேன் என்று சிறை வாசலிலேயே நின்றுவிட்டேன். இரவு 1.00 மணிக்கு என்னைக் கட்டாயப்படுத்தி இழுத்துச் சென்றார்கள். சிறைப் பிரச்சனைகளை கேட்டதற்காக, அராஜகங்களை தட்டிக் கேட்டதற்காக என்னை முடக்கவும் என் சிந்தனையை மழுங்கடிக்கவும் முற்பட்டனர்.

நவம்பர் 16 அன்று ரிமாண்டு எக்ஸ்டனுக்கு கோர்ட்டுக்குச் செல்லும்போது, ரிசர்வ் போலீஸ் எஸ்கார்டு உனக்கு ஜாமீன்தார் வரவிடாமல் செய்வோம். நீ உள்ளேயே இருக்கணும் என்று மிரட்டினான்.

நவம்பர் 18, தேதியில் டாக்டர் அல்லி கிருபாவதி சாப்பிடுவதற்காக அழைத்து சென்றாங்க. கட்டாயப்படுத்தி டிரிப்ஸ் ஏத்தினாங்க. நான் நல்லா இருக்கும்போது ஏன் எனக்கு டிரிப்ஸ் ஏத்துறீங்க என்று கேட்டேன். உனக்கு ஏத்தலைன்னா, எனக்கு வேலை போய்விடும் என்று என்னை வற்புறுத்தி டிரிப்ஸ் ஏத்தினாங்க. டிரிப்ஸ் ஏத்தியவுடன் வயிறு உப்பிப்போனது. நீரும் இரத்தமுமாக போச்சு. என்னால பேச முடியல. தடியால வாயில குத்துனாங்க. பின்னால கையை கட்டிவிட்டு காணிக்கை வார்டன்கள் அடித்தார்கள், மயக்கமானேன். மூன்று நாட்கள் நினைவிழந்தேன். எழுந்து பார்த்ததில் மலமும் சிறுநீரும் துர்நாற்றமுள்ள தனியறையில்



படிப்பகம்

www.padippakam.com

அடைக்கப்பட்டிருந்தேன். உடலில் ஒரு பொட்டுத்துணி கூட இல்லாமலிருந்தேன். உடலெல்லாம் ஒரே வலியாக இருந்தது. நான்காவது நாள் எழுந்தபின்பு ஏதேதோ நினைவுகள் என்னை வாட்டி வதைத்தது. தூக்கமின்றி பல நாட்கள் இருந்தேன். கிட்டதட்ட ஐந்து நாட்களுக்கு சிறைக் கம்பிகளை பிடித்துக்கொண்டே இரவு முழுக்க கழித்தேன். படுத்தால் உடல் முழுக்க ஷாக் அடிப்பதுபோல் இருந்தேன். எட்டு நாட்கள் என்னை அந்த அறையிலேயே வைத்திருந்தார்கள்.

நவம்பர் 26 அன்று குளியாட்டம் என்றுகூறி விஜயா வார்டன் என்னை இழுத்துவந்து நிர்வாணமாக்கி என் தலையில் பாவாடையை கட்டிவிட்டு மூக்கில் அழுக்குத் தண்ணியை ஊத்தினாங்க. நான் மூச்சுத்திணறி கத்தியபோது என்னை ஒரு இடம் விடாமல் லத்தியால் அடித்து கொடுமை படுத்தினாங்க.

கடுமையாக என்னை அடித்ததில் என் உடல்நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டேன். நான் சிறையில் அனுபவித்த கொடுமைகள் கொஞ்சமல்ல. ஏறத்தாழ ஓராண்டு மூன்று மாதம் தனிமைச் சிறையில் பல சித்ரவதைகளுக்கு இரையாக்கப்பட்டேன். இந்த கொடூர அடக்குமுறை என் எண்ணங்கள், உணர்வுகளை முறியடிக்கும் என்று எண்ணியவர்கள் மத்தியில் என் போராட்ட உணர்வுகள் வலுப்பெற்றிருக்கிறது.

**ஆசிரியர் : சிறையில் நடக்கும் கொடுமைகளைக் கூற முடியுமா?**

*ஆனந்தி :* சிறையில் நடக்காத அராஜகமே இல்லை. போதை, புகையிலை, பான்பராக் போன்ற அனைத்தையும் வார்டன்களே விற்கின்றனர். சூதாட்டம்கூட நடக்கின்றது. வார்டன்கள் சிறைக்கு வரும் அரிசி, பருப்பை கடத்தி விற்றுவிடுகின்றனர். ஒருமுறை நான் என் கண்ணாலே பருப்பு விற்கப்படுவதை பார்த்து, ஏன் இப்படி எங்களுக்கு வரும் பருப்பை திருட்டுத்தனமாக விக்கிறீங்க? என்று கேட்டேன். ஆனால் இந்த கேள்விக்கு மௌனம் சாதித்துவிட்டனர். இதுமட்டுமின்றி குழந்தைகளுக்கு வரும் பாலைக்கூட இவர்கள் விற்றுவிடுகின்றனர். அதுபோக சிறைக்கு வரும் கைதிகள் கொண்டுவரும் பணத்தைக்கூட வார்டன்களும் காணிக்கை வார்டன்களுக்கு கொடுப்பது என்பது எழுதப்படாத சட்டம்.

**ஆசிரியர் : உங்களுடைய போராட்டங்களுக்கு நீதித்துறை ஆதரவாக இருந்ததா?**

*ஆனந்தி :* ஏறத்தாழ ஒரு வருடம் மூன்று மாதம் சிறையில் அடைக்கப்பட்டேன். அப்போது எனக்காக வந்த ஜாமீன்தாரர்களை தர்மபுரி கியூ பிரிவு போலீஸ் மிரட்டியது. மற்றொரு புறம் நீதிபதிகள்கூட மிரட்டியுள்ளனர். நீதிமன்றத்தில் ஜாமீன்தார்களை திருப்பி அனுப்பிவிட்டனர். உயர் நீதிமன்றத்தில் வழக்குப்போட்ட பின்புதான் என்னுடைய ஜாமீன்தார்களை ஏற்றுக்கொண்டார்கள். சிறைக்கொடுமைகளை எதிர்த்து என் வழக்கறிஞர் நீதிக்கோரி போட்ட மூன்று மனுவில் இரண்டு மனுவை உயர்நீதிமன்றமும் தள்ளுபடி செய்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அதேபோல சிறையில் நடக்கும் விசயங்களை நீதிமன்றத்தில் கொடுத்தபோதெல்லாம் பெட்டிசன் கொடுங்கள் என்று கூறியே அமைதி காத்தனர். செத்தபிறகுதான் நடவடிக்கை என்கிறார்கள்.

நீதித்துறையோ, காவல்துறையோ, சிறைத்துறையோ உழைக்கும் மக்களுக்காக இல்லை. அதிகார வர்க்கத்தினருக்கும், பணக்காரர்களுக்குமானதுதான். எஸ்.ஐ.அப்துல் ஜாபர் கூறியதுபோல பணக்காரர்களை காக்கதான் நாங்க இருக்கிறோம். ஏழைகளுக்காக இல்லை என்பதை நிரூபிச்சிட்டாங்க.

# புரட்சிக்கனல்

*என் சகோதரி*
*ஆனந்தி!*
*வேலூர் சிறையில்*
*வாடுகின்றாய் – எதிரியின்*
*சித்ரவதையால்...*
*கொடூர தாக்குதலால்*
*நினைவிழந்தாய்...*

*கோரப்பிடியில் சிக்குண்ட*
*– நீ*
*தனிமைச் சிறையில்*
*தனியாக எதிரியின்*
*அராஜகங்களை எதிர்த்து*
*குரல்கொடுக்கின்றாய்...*

*புரட்சியே மூச்சென்று*
*எழுப்பிய –*
*உன் போர்குரல்*
*சிறைக் கதவுகளை*
*தகர்தெறிந்துள்ளது!*

*எதிரியால் ஏவப்பட்ட*
*மனப் புண்ணை*
*புரட்சி மருந்தால்*
*புண்ணாற்றிய*
*என் சகோதரியே*

*எதிரியின் கொட்டகையில்*
*புரட்சிக்கனலை*
*போரொலியாய் ஒலித்துவரும்*
*என் சகோதரியே*
*விவசாய பெண்களின்*
*உரிமை குரலெழுப்பிய*
*உன்னை*

*சித்ரவதைக்கு இரையாக்கிய*
*எதிரியின் கோரபிடியை*
*உன் மன உறுதியில்*
*தூளாக்கிய*
*என் சகோதரியே.*

*நீ –*
*தனியானவளல்ல!*
*உன் கரங்களோடு*
*ஆயிரமாயிரம் கரங்கள்*
*ஒன்றுகூடி*
*நிற்கின்றோம்!*

*– கனல்*



படிப்பகம்

www.padippakam.com

# மைய, மாநில நிதிநிலை அறிக்கைகள் மீளாது தொடரும் மக்களின் துயரங்கள்

**மை**ய, மாநில ஆட்சியாளர்கள் நிதிநிலை அறிக்கைகள் அடுத்தடுத்து ஒரு மாதம் இடைவெளியில் வந்துள்ளன. மக்களை கிடுக்கிபிடிக்குள் சிக்க வைத்து விழி பிதுங்க வைத்துள்ளன.

நிதிநிலை அறிக்கை என்கின்ற வரவு–செலவு திட்டம் என்றால் என்ன?




ஒரு தனிநபர், குடும்பம், தொழிற்சாலை அல்லது நாடு தனது வரவின் மொத்த கணக்கை சரிபார்த்து அதற்கு ஏற்றபடி செலவைத் திட்டமிடுதல் ஆகும். வரவுக்கு ஏற்ப செலவைக் கட்டுபடுத்தி வரவுக்குள் செய்தால்தான் குடும்பம் உருப்படும் என்பது பொதுசன வழக்கு. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, உடல்நலம் போன்ற அவசியங்களுக்கு செலவிட்டு போக மீதியை கேளிக்கைகளுக்கும், அடிதடிகளுக்கும் செலவிடுப்வன் புத்திசாலி, திறமைசாலி. அடிதடிகளுக்கும், கேளிக்கைகளுக்கும் செலவிட்டு தனது மனைவி, ம சீரழிய விடுபவனை நாடும், மக்களுய [illegible]... உருப்படாதவன். இதையே, பாரதீய ஜனதா ஆட்சியினரும், அ.தி.மு.க. ஆட்சியினரும் செய்தால்.. அதற்கு பெயர் என்ன தெரியுமா? தேச பக்தர்கள்... பொருளாதார மேதைகள்... உலகோடு ஒத்து வாழ்பவன்... என்று பத்திரிகைகள் புகழாரம் சூட்டுகின்றனர்.

**யாருக்கான பட்ஜெட்?**

செத்துப்போன ராஜீவ் காந்தி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, 1991ஆம் ஆண்டில் நரசிம்மராவ் அரசினால் விரைவு படுத்தப்பட்டு, இன்று பா.ஜ.க. ஆட்சியில் நாலுகால் பாய்ச்சலில் விரைந்து கொண்டிருக்கும் தாராளமயமாதல்–தனியார்மயமாதல்–உலகமயமாதல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில்தான் இன்றைய மைய, மாநில அரசுகளின் அடிப்படையில்தான் இன்றைய மைய, மாநில அரசுகளின் நிதிநிலை அறிக்கைகள் உள்ளன. இக்கொள்கைகளுக்கும், நிதிநிலை அறிக்கைகளுக்கும் இரு பிரதான நோக்கங்கள் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

1. தொழிலாளர்கள், பெண்கள், விவசாயிகள், தலித்துகள், சிறுபான்மையினர் (குறிப்பாக இஸ்லாமியர்கள்), பழங்குடியினர், சிறுதொழில் முனைவோர் ஆகியோரை சுரண்டுவது; இவர்களின் அடிமடியில் கைவைத்து இருப்பதை பறிப்பது; இதுவரை இவர்கள் போராடி பெற்ற உரிமைகளை (மானியங்கள், சலுகைகள்....) பறிப்பது.. மொத்தத்தில் இவர்களை எதிரிகளாக பாவிப்பது.

2. அமெரிக்கா, ஜப்பான், ரசியா, ஜெர்மன் போன்ற வல்லரசுகள், அந்நாடுகளை தலைமையகமாகக் கொண்டு சுரண்டும் பன்னாட்டு கம்பெனிகள், அம்பானி, டாட்டா, பிர்லா, கோயங்கா, முரசொலி மாறன் போன்ற தரகு முதலாளிகள் மற்றும் இவர்களின் ஏஜெண்டுகள், வெளிநாட்டில் வசிக்கும் இந்திய (மேல்சாதியினர்) பணக்காரர்கள் ஆகியோர்களின் வாழ்வை வளப்படுத்துவது, வரிச்சலுகைகளை அள்ளி வழங்குவது, நமது நாட்டின் கனிவளங்களை, மூலாதாரங்களை அடிமாட்டு விலைக்குத் தருவது, குறைந்த செலவில் நமது மக்களின் உழைப்புச் சக்தியை உறிஞ்சுவதற்கு வசதிகள் செய்வது போன்றவைகளாகும். மொத்தத்தில், இவர்கள் இக்கொள்கையின், ஆட்சியாளர்களின் நண்பர்கள், செல்லப் பிள்ளைகளாவர்.

இப்படித் தரம் பிரித்து புரிந்து கொண்டால்தான் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள மைய, மாநில அரசுகளின் நிதி நிலை அறிக்கைகளின் சாரத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். மைய அரசின் கிராமப்புறங்களில் வேலைக்கு உணவு திட்டம், மாநில அரசின் 10 ஆயிரம் பெண்கள் பயன்பெறும் 14 பால் கூட்டுறவு சங்கங்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு மட்டும் மானிய விலை ரேஷன் அரிசி, கோதுமை வழங்குதல், இன்னபிற மக்கள் நலத்திட்டங்கள் யானை பசிக்கு சோளபொறி மட்டுமல்ல, மைய, மாநில அரசுகளின் வர்க்க நோக்கத்தை, தங்களின் சார்பை மறைக்கும் கயமைத்தனமாகும்.

## புள்ளி விவரக் கேலிக்கூத்து

மைய, மாநில அரசுகளின் நிதி அமைச்சர்கள் யஷ்வந்த் சின்ஹா, பொன்னையன் தங்களின் நிதிநிலை அறிக்கைகளில் ஈறைப் பேனாக்கி, பேனை பெருமாளாக்கப் போவதாக புள்ளிவிவரக் கணக்குகளை அள்ளி வீசுகின்றனர். பேருந்துகளில் உள்ள பலகைகளில் கறுப்புக்கு பதிலாக பச்சை, மஞ்சள் என்று மாற்றி வர்ணம் பூசி பணத்தை அதிகமாக பயணிகளிடம் இருந்து கறக்கும் வித்தைபோல் இதுவும். 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு பட்ஜெட் அறிவிப்பின் பொழுது மட்டும் வரிவிதிப்பு, விலை உயர்வு, மானியங்கள் பற்றிய அறிவிப்பு வரும். கார்கில் போருக்கு பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு மாதமும் வரிவிதிப்பு, மானிய வெட்டு அறிவிப்புகள் மைய, மாநில அரசுகளால் மாறி மாறி வெளியிடப்படுகின்றன. புள்ளி விவரக்கணக்கு போட்டு முடிக்கும் முன்பே வேறு கணக்கு வந்து பயமுறுத்துகின்றது. தமிழக அரசு நான்கு மாதங்களுக்கு முன்பு நவம்பரில் பேருந்து கட்டணம், மின்கட்டணம், ரேசன் அரிசி, மருத்துவமனை நுழைவு கட்டணம், இன்னபிறவற்றின் மீது ரூ.4000 கோடிக்கு வரி விதித்தது. பலமான எதிர்ப்பு இருந்தும் அரசு சிறிதும்



படிப்பகம்

www.padippakam.com

இறங்கவில்லை. அதேசமயம் பாதுகாப்பு காரணம் காட்டி மைய அரசு இரயில் கட்டணத்தை உயர்த்துகிறது. பின்பு வந்த மைய அரசு நிதிநிலை அறிக்கையில் தபால் கட்டணம், இரயில் கட்டணம், சரக்குக் கட்டணம், மண்ணெண்ணெய், சமையல் வாயு, யூரியா, இதர உரங்கள் என்று அனைத்திற்கும் சகட்டுமேனிக்கு வரிவிதித்து உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் விளையாடியது. தற்பொழுது தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் ஜெயா அரசு மீண்டும் நிதிநிலை அறிக்கை என்று ரூ. 690 கோடிகளுக்கு அரிசி, கோதுமை, பருப்பு, உளுந்து, மருந்துகள், சிமெண்ட் என்று அனைத்து நேர்முக–மறைமுக வரிகள் விதிக்கப்பட்டுள்ளது. புள்ளி விவரக் கணக்கு போடுவதற்கு இன்னொரு புள்ளிவிவரம், மற்றொரு புள்ளி விவரம் என்றும், அதை மறைக்க நடக்கும் தகடுதத்தங்களைச் சேர்த்து இக்கணக்குகளை கேலிக்கூத்தாக மாற்றி விட்டது.

உண்மையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சமையல் வாயு ரூ. 150, தற்போது ரூ. 260; மண்ணெண்ணெய் லிட்டர் ரூ. 4–லிலிருந்து தற்போது ரூ. 15க்கு மேல், பேருந்து, இரயில் கட்டணங்கள் 100 சதவீதம் மேல்; அரிசி, கோதுமை, சர்க்கரை, யூரியா, சமையல் எண்ணெய், பால், துணிமணிகள் என்று அனைத்தும் பலமடங்கு வரி விதிக்கப்பட்டு தாறுமாறாக விலை உயர்ந்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் 100, 150 சதவீதம் என்று விலை உயர்ந்தால் சாதாரண மக்கள் வாழ்வு என்ன ஆவது?

## பெண்கள் மீதான தாக்குதல்கள்

ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோயில் ஆண்டிப் பட்டாரம், ஆண்டிப் பட்டாரங்களுக்கு இளைச்சவர்களாக பெண்கள் உள்ளனர். பட்டாரங்கள், சாமியார்கள் கொள்கைகள்படி நடக்கும் மைய, மாநில அரசுகள், பெண்களைக் குறிவைத்து அடுக்கடுக்காக தாக்குதல்கள் நடத்துகின்றன. பெண்களை ஒடுக்கி அடுப்பங்கரை மூலையில் குத்துக்காலிட்டு முடக்க சங்பரிவாரங்கள் நினைக்கின்றன. பெண்கள் சுயமதிப்பு பெற்று தலைநிமிர்ந்து நிற்க வைப்பது வேலையும், கல்வியும் தான்! புதிய கல்வி கொள்கையினால் கல்வி ஏற்கனவே வணிகமாகி விட்டது. இதில் இன்னொரு படி தமிழக அரசு எடுத்து வைத்துள்ளது. பல்கலைக் கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவி படிப்படியாக குறைக்கப்படும், பள்ளிக் கல்வி துறையிடமிருந்து உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கான நிதி உதவியின் அளவு நடப்பு ஆண்டில் நிறுத்தப்படும் என்று தமிழக நிதிநிலை அறிக்கை கூறுகிறது. தங்களின் நிதி ஆதாரத்தை மக்களிடம் திரட்ட அறிவுறுத்துகிறது. இலவசமாகக் கல்வி அளிக்கையிலேயே பெண் குழந்தைகளை நிலவுடைமை பண்பாட்டு, சமூக, பொருளாதாரக் காரணங்களால் படிக்க வைக்க தயக்கமும், இடையில் பள்ளிவிட்டு நிறுத்துவதும் அதிகம் உள்ளது. கல்விக்குக் கட்டணம் வசூலித்தால் பெண்கள் கல்வி கற்கும் எண்ணிக்கை கணிசமாகக் குறையும்.



படிப்பகம்

www.padippakam.com

மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் விருப்ப ஓய்வு திட்டம் அமுலில் உள்ளது. தற்பொழுது மைய, மாநில அரசு துறைகளிலும் விருப்ப ஓய்வு திட்டங்களை (V.R.S) அமுல்படுத்த உள்ளன. அரசு ஊழியர்களை ஆசைக்காட்டி மோசம் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம். நிலவுடமை குடும்ப சூழல் பெண்களைத்தான் முதலில் பணிகளை விட்டு விலக நிர்பந்தம் செய்கின்றது. சங்பரிவார கும்பல்கள் பெண்களை அடுப்படியில் உழலச்செய்யும் நோக்கம் இப்படியாகப் பல வகைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

காற்று, தண்ணீர், உணவு என்று அனைத்தும் முதலாளிகளின் ஏகாதிபத்தியங்களின் பேராசையால் மாசு பட்டு நஞ்சாக மாற்றிவிட்ட சூழல் நிலவுவதால் மக்களின் உடல்நலம் சீர்கெட்டு போய்வருகிறது. இதிலும் பெண்களின் உடல் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக உள்ளதால் மிகவும் உபாதைக்கு உள்ளாக்கப்படுகின்றது. 'தமிழக அரசு நவம்பர் மினி பட்ஜெட், தற்போதைய பட்ஜெட் ஆகிய இரண்டிலும்' மருந்துகளுக்கு வரி, மருத்துவமனை நுழைவு கட்டணம் என்று பலவகையில் இதுகாறும் இருந்த நலவுரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. இவை பெண்களின் உடல்நலனை மேலும் சீரழிக்கும்.

தமிழக நிதிநிலை அறிக்கையில் ஜெயா அம்மையார் மதுபான கடைகளில் "பார்" வைக்க அனுமதி அளித்துள்ளார். அரசிற்கு கட்சியிலுள்ள மதுபான முதலாளிகளுக்கும் பணமழைப் பொழியும். குவாட்டர் அடிக்கும் குடிமகன்கள் "பார்"களில் அமர்ந்து "புல்" அடிப்பார்கள். குடிமகன்களின் குடும்பங்களில் வறுமைத் தாண்டவமாடும். அடிதடி உதைகள் குடும்பத்தில் நடக்கும். இதனால்தான் ஜெயா அம்மையார் "பார்" திறக்கும் கையோடு அதனால் ஏற்படும் குடும்பச் சண்டைகளை விசாரிக்க மகளிர் காவல்நிலையங்களை புதியதாக திறந்து வைக்க பட்ஜெட்டில் முடிவு செய்துள்ளார்.

## மீளாது தொடரும் தேக்கம்

உலக ஏகாதிபத்திய முகாம்கள் அனைத்தும் மீளாத தேக்கநிலையில் உள்ளன. உலகமயமாதலின் விளைவாக இந்தியாவும் அந்த விஷச்சூழலில் சிக்கித் தவிக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த தேக்கம் அனைத்தும் தழுவியதாக கடுமையாக உள்ளது. 1993--94 முதல் 1996-97 யில் 8.5 சதவீதமாக இருந்த தொழில் துறை வளர்ச்சி 1997-2001-ல் 4.8 சதவீதமாக குறைந்து உள்ளது. விவசாயத்துறையில் இதைவிட மோசமாக 4.5 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதமாக குறைந்துள்ளது. தனிநபர் ஒருவருக்கு 1991-ல் நாளொன்றுக்குக் கிடைக்க கூடியதாக இருந்த உணவு தானியம் 468.5 கிராமில் இருந்து இன்று 390.6 கிராமாக குறைந்து உள்ளது. பருப்பு வகைகள் 34.3 கிராமிலிருந்து 26.4 கிராமாக குறைந்து உள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து இத்தகைய கடும் நெருக்கடியை சந்தித்தது இல்லை. ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளின் சீரழிவு இது!



படிப்பகம்

www.padippakam.com

இந்திய உணவு தானிய கழகத்தின் கிடங்குகளில் உள்ள சேமிப்பு வழக்கத்தை விடவும் மூன்று மடங்கு அதிகமாக 6 கோடி டன்கள் (6,00,00,000) இருந்தாலும் மைய அரசு ரேசன் கடைகளில் நியாயவிலையில் அவற்றை வழங்கவில்லை. வேலைக்கு உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை. நாட்டில் வறுமை கோட்டிற்குக் கீழே 30 கோடி மக்கள் உள்ளனர் என்று புள்ளிவிவரத்தை பட்டியலிடுகிறது. பட்டினி சாவுகள், தற்கொலைகள் நடந்தாலும் அவற்றை பற்றி துளியும் கவலை கொள்ளாமல் கல்நெஞ்சம் படைத்தவர்களாக பாசிச பாரதிய சனதாக்காரர்கள் உள்ளனர்.

"ஆகாறு அளவு இட்டியது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்று தமிழ்ப் புலவன் திருவள்ளுவர் மன்னர்களுக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே அறிவுறுத்துகிறார். அரசர்களுக்கு பொருள் வருகின்ற நெறியளவு சிறிது என்றாலும் அதனால் கேடில்லை; செலவுச் செய்கின்ற அளவு பெரியதாக இல்லாமல் இருந்தால் என்கிறார். பழம்பெருமை பேசும் பாரதிய ஜனதா கட்சியினரும், இன்ன பிற ஆட்சியினரும் இவற்றை காதில் வாங்கி கொள்வதில்லை. தொடர்ச்சியாக பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகள்! விளைவாக மக்களின் சொத்துக்களை விற்று சரிசெய்கின்றனர். மைய அரசு விற்பனை செய்யும் அமைச்சகம் ஒன்றை போட்டு லாபம் தரும் அரசு, பொதுத்துறை நிறுவனங்களை அமைச்சர் அருண்சோரி இந்திய பணமுதலைகளுக்கும், வெளிநாட்டு இந்தியர்களுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் தள்ளுபடி விலை, வந்த விலை என்று வாரி வழங்குகின்றார். பால்கோ அலுமினியம், தொலைத் தொடர்பு துறை, கோலார் தங்கச் சுரங்கம், சேலம் உருக்காலை, நெய்வேலிச் சுரங்கம், சென்னை துறைமுகம் என்று இந்த பட்டியல் தொடரப் போகிறது. மைய அரசின் வழியை பின்பற்றி தமிழக அரசு மாநில அரசின் வழியை பின்பற்றி தமிழக அரசும் மாநில அரசு நிறுவனங்களை விற்க திட்டம் ஒன்றை இந்த பட்ஜெட்டில் வகுத்துள்ளது.

தாய், தந்தையர் சேர்த்த சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு விற்றுக் குடி, கூத்தி, அடிதடி என்று வாழ்பவனை சமூகம் என்ன சொல்லும்? தறுதலைகள் என்று இடித்துரைக்கும்! இந்திய, தமிழக அரசின் சொத்துக்களை விற்கும் இந்த ஆட்சியாளர்கள் தறுதலைகள் என்று சொல்லப்படுவதில்லை. தேச பக்தித் திலகங்கள், பொருளாதார மேதைகள் என்று புகழ் மாலை சூட்டப்படுகின்றனர்.

இந்தத் தறுதலைகள் நாட்டை இருண்ட நிலைக்கு கொண்டு செல்கின்றனர். வேலையின்மை, விலையுயர்வு, பொருளாதார தேக்கம், போர்வெறி சூழல், மதக் கலவரங்கள் என்று நாட்டையே சுடுகாடாக்குகின்றனர். இதிலிருந்து மீளும் வழி உண்டா? ஒளிக்கீற்றுகள் எங்காவது தென்படுகிறதா? சாதாரண மக்களின் எதிர்பார்ப்பு இதுதான்! ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்ற அறிவியல் விதி பொய்யாகி விடுமா? காலம் பதில் சொல்லும்!

— *சூர்யா*



படிப்பகம்

www.padippakam.com

# சகித்துக் கொண்டேதான் வாழவேண்டுமா?

**க**ண்களில் கண்ணீரை தேக்கி இயலாமையோடு கமலா நின்று கொண்டிருந்தாள். எதிரில் கார்மண்ட் தொழிற்சாலையின் மேனேஜர் விடாமல் ஏதேதோ பேசிக்கொண்டே இருந்தார். "என்னம்மா உனக்கு மட்டும்தானே இந்த மாதிரி பிரச்சனையா? துணிகள் கொடுக்கிற சாக்கில செல்வம் மேல கை வைக்கிறான், இடிக்கிறான்னா, நீதான் கொஞ்சம் கவனமா இருக்கணும். அவன் இரட்டை அர்த்தம் தொனிக்க பேசறான்னா கண்டுக்காத. பெண்கள்ன்னா கொஞ்சம் பொறுமை வேணும். மத்த பெண்களுக்கெல்லாம் இது மாதிரி பிரச்சனை இல்லையா என்ன? அவங்கள்லாம் இப்படியா வந்து சொல்லிட்டிருக்காங்க. ரொம்ப முடியலன்னா, பேசாம வேலைய விட்டு நின்னுடு. செல்வத்தைப் பொறுத்தவரை நல்லா வேலை பார்க்கக் கூடியவன் அனாவசியமா, அவனை நிர்வாகம் இழக்க முடியாது".

சென்னையிலுள்ள கார்மெண்ட் தொழிற்சாலையில் டெய்லராக வேலை செய்து வருகிறாள் கமலா. வீட்டில் அப்பாவின் சம்பளம் வாய்க்கும் வயிற்றுக்கும் மட்டும்தான் போதும். இரண்டு தங்கைகளை கரையேற்றும் பொறுப்போடு கமலா மிகுந்த அக்கறையுடன் வேலை பார்த்து வந்தாள். வேலைக்குச் சேர்ந்த ஒரு வருடத்திலேயே பணியிடத்தில் நல்ல பெயர். ஆனால் இப்போது சூப்பர்வைசர் செல்வம்தான் கமலாவின் எதிரி. துணிகளை கொடுக்கும் சாக்கில் மேலே கை வைப்பதும், மேற்பார்வையிடுவதுபோல அருகே வந்து நிற்பதும் என்று செல்வத்தின் சேட்டைகள் நாளுக்கு நாள் அதிகரித்தன. சொல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் ரொம்பவே தவித்துப் போனாள் கமலா. ஒரு கட்டத்தில் சக தோழிகளிடம் சொன்ன போது, அவர்களுக்கும் இதே கதிதான் என்பது தெரிந்தது.

பொருளாதார நிர்பந்தம் காரணமாக வேலைக்கு வந்ததால் சூப்பர்வைசரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத நிலை. கண் ஜாடை செய்வது, பெண்கள் முன்னிலையில் சக நண்பனிடம் இரட்டை அர்த்தம் தொனிக்க பேசுவது என்று வளர்ந்து கொண்டே போன செல்வத்தின் தொல்லைகள், ஒரு கட்டத்தில் தனியாக பாத்ரூம் செல்லும் பெண்களிடம் நிர்வாணப் படங்களை காட்டுவதில் போய் நின்றது. இவ்வளவு வக்கரமான செல்வத்தின் செயல்களை சகிக்க முடியாமல் மேலிடத்தில் புகார் செய்தாள் கமலா. விளைவு, வேறு துறைக்கு கமலா மாற்றப்பட்டாள். தனக்கு கீழே பணிபுரிபவர்களை (எந்த வகையிலாவது) வேலை வாங்கும் திறமை கொண்ட செல்வத்தைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை நிர்வாகம். அதனால் புகார் கொடுத்தவருக்கே பாதுகாப்பு என்ற பெயரில் தண்டனை.



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் மருத்துவர்களாக, வழக்கறிஞர்களாக, கிராம சுகாதார செவிலியர்களாக, விவசாயத்தில் கூலி வேலை செய்பவர்களாக, நடைபாதைத் தொழிலாளர்களாக; வீட்டு வேலை செய்பவர்களாக, எல்லா துறையிலும் நிரம்பியுள்ளார்கள். அவரவர் பணியிடங்களில் பெண்களுக்கு இதுபோன்ற பாலியல் தொந்தரவுகள் சகஜமாக நடந்து வருகிறது. மேலிடத்தில் முறையிட்டால், அடக்க ஒடுக்கமா டிரஸ் பண்ணிட்டு பெண்கள் இருக்க வேண்டிய மாதிரி இருந்தாத்தானே? அவங்கதான் பாலியல் தொந்தரவு செய்ய ஆண்களைத் தூண்டுறாங்க என்று பெண்கள் மேலேயே குற்றங்கள் திசைதிருப்பி விடப்படுகிறது.

பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக சட்டம் ஏதும் இல்லாத நிலையில், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக செயல் வீரர்களின் கோரிக்கையை ஏற்று உயர்நீதிமன்றம் சில விதிமுறைகளை வகுத்தது. இதற்கு விசாகா தீர்ப்பு என்று பெயர்.

முக்கியமான இந்தத் தீர்ப்பை பெண்கள் 'முன்னேற்றத்துக்காக' பாடுபடுபவர்கள் வரவேற்றுள்ளார்கள். மேலே சொல்லப்பட்ட தீர்ப்பின்படி பணியிடங்களில் பெண்களின் கண்ணியத்துக்கு இழுக்கு வராமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மேலதிகாரி அல்லது முதலாளிகளுடைய பாலியல் கொடுமை என்பது வெறும் பலாத்காரம் மட்டுமல்ல. பெண்ணை உடல் ரீதியாக சீண்டுவது அல்லது அவர்களுக்கு வெகு அண்மையில் போவது, உறவு கொள்ளுமாறு கெஞ்சுவது அல்லது மிரட்டுவது, கொச்சையாக விமர்சிப்பது, மோசமான படங்களைக் காட்டுவது மற்றும் உடம்பாலோ, சொல்லாலோ, சைகைகளாலோ துன்புறுத்தினாலும், அவையெல்லாம் பாலியல் கொடுமைதான்.

பெண்களுக்கு பாலியல் ரீதியான தொந்தரவுகள், வெளி நபர்கள், சக ஊழியர்கள், மேல் அதிகாரிகள் மூலமாக வராமல் தடுக்க வேண்டிய பொறுப்பு நிர்வாகத்தினுடையது. பாலியல் கொடுமைகள் எவை என்பதைப் பட்டியலிட்டு ஒவ்வொரு நிர்வாகமும் கண்டிப்பாக செய்திப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும். இதைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், புகார் கமிட்டியும் அமைத்து செயல்படுத்த வேண்டும் என தனியார் உள்பட எல்லா நிர்வாகங்களுக்கும் சுப்ரீம் கோர்ட் ஆணையிட்டுள்ளது.

நிறைய பெண்களுக்கு தாம் அனுபவித்து வருவது பாலியல் கொடுமைதான் என்பதே தெரிவதில்லை. பெண்ணாய் பிறந்து விட்டோம். எல்லாம் விதி என்று நினைத்தே பலர் நெஞ்சுமுட்ட அழுகையைத் தேக்கிக் கொண்டே சகித்துக் கொள்கிறார்கள். பெண்ணடிமைத் தனத்தை ஊட்டி வளர்க்கும் நம் சமூக அமைப்பே, இதற்குக் காரணம் எனலாம். குழந்தை பிறந்த உடனேயே ஆண், பெண் என்ற பேதத்தோடுதான் வளர்க்கப்படுகிறார்கள். பெண் குழந்தையென்றால் அமைதியாகவும், அடக்கமாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதனாலேயே தனக்கு வாய்க்கும் கணவன் குடிகாரனாக இருக்கும் பட்சத்தில் கூட பெண், அவனுக்கு அடங்கி சகித்து போக வேண்டிய நிலமையுள்ளது. இப்போது வரும் சினிமாவும், கதைகளும்,



படிப்பகம்

www.padippakam.com

பெண்களைக் கேலி செய்வதை ஊக்கப்படுத்துகின்றன. பெண்கள் அதையெல்லாம் 'பெருந்தன்மையோடு' சகித்துக் கொண்டு போக வேண்டும் என்பதாகவே அவைகள் பெரும்பாலும் கற்றுத் தருகின்றன. 'முதல்ல கேலி பண்ணுவான்', அப்புறம் நமக்குள்ள காதல் வந்துவிடும் என்று இளம்பெண்கள் நம்பும்படி மீடியாக்கள் சித்தரிக்கின்றன. இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களை அடக்குவதாகவே நம் சமூகம் உள்ளது.

விழிப்புணர்வு பெற்று புகார் கமிட்டி வரைச் செல்லும் பெண்களின் கதி இதுவென்றால், வேலையிடங்களில் பாலியல் வன்முறைக் குறித்த விசாகா தீர்ப்பு கூட பல்வேறு பெண்கள் போராட்டங்களுக்கு பின்தான் கிட்டியது. ஆனால் தீர்ப்புகள் நடைமுறைப்படுத்துவது கூட ஆணாதிக்கம் உள்ள சமூகத்தில் அத்தி பூத்தது போன்றதே! அதற்காக போராட வேண்டிய தேவை உள்ளது. காவல்துறை, அதிகாரவர்க்கம், முதலாளிகள், நிலபிரபுக்கள் மட்டுமல்ல, நீதிமன்றங்கள் கூட வீழ்த்துவதற்கான சமூக மாற்றத்தின் மூலமே இறுதித் தீர்வு கிட்டும். அதுவரைச் சட்டங்களை மட்டும் நம்பிப் பெண்கள் பாதுகாப்பாக உணர மாட்டார்கள்.

ஏற்கனவே வரதட்சணைக்கெதிராகவும், கற்பழிப்புக்கு எதிராகவும் நிறைய சட்டங்கள் உள்ளன. ஆனால் சட்டங்களையெல்லாம் எந்த அளவு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது நாமறிந்ததே! சுப்ரீம் கோர்ட்டின் இந்தப் பரிந்துரையும் கூட, ஆணாதிக்க வெறிபிடித்த அரசு இயந்திரத்தால் சிறிதளவேனும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியே! மேலும், பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் கொடுமைக்கு எதிரான சுப்ரீம் கோர்ட்டின் இந்த பரிந்துரையும் கூட முழுமையானதாக இல்லை. இந்தப் பரிந்துரை ஒழுங்குப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்குத்தான் பொருந்தும். அதாவது அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு மட்டும்தான். விவசாய கூலி வேலை செய்யும் பெண்ணுக்கோ, வீட்டு வேலை செய்யும் பெண்ணுக்கோ இவை பொருந்தாது. ஆனால் நம் நாட்டில் 95% மேல் பெண்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனங்களில்தான் வேலை செய்கிறார்கள்.

பெண்கள் படும் துன்பங்களை நாம் தினமும் பார்த்துக் கொண்டிருந்தாலும், அதையும் பிரச்சனைகளாக அங்கீகரித்து, வழக்குகளை சுப்ரீம் கோர்ட் வரை எடுத்துச் சென்று அதற்கு ஒரு சாதகமான தீர்ப்பு வாங்குவதே பெரும் பாடாய் இருக்கிறது. ஆனால் அந்த தீர்ப்புக்கு ஏற்றபடி மாற்றங்கள் எதுவும் நடக்காதது, பெண்கள் முன்னேற்றத்துக்காக உண்மையாக உழைப்பவர்களுக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. சுப்ரீம் கோர்ட்டின் பரிந்துரைப்படி இதுவரை, ஒருசில அலுவலகங்களில்தான் புகார் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சுப்ரீம் கோர்ட் இப்படி ஒரு பரிந்துரை செய்திருப்பதே பெரும் பாலானவர்களுக்குத் தெரியாது. குற்றம் புரிந்தவருக்கு எதிராக சட்டப்படி என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றியும் பரிந்துரையில் எதுவும் கூறப்படவில்லை. இதுவே இந்த பரிந்துரைகளை செல்லுபடியாகாமல் செய்கிறது.

புகார் கமிட்டியின் அமைப்பு சரியாக இல்லாததால், புகார் கொடுப்பதை விட பேசாமல் இருப்பதே மேல் என்று பெண்கள் நினைக்கிறார்கள். புகார் கொடுத்தால் மேலும் மேலும் பாதிப்பு என்பது போல திரும்ப திரும்ப விசாரணை, இன்னொரு தரப்பில் மிரட்டல் மட்டுமல்லாமல் சக பெண்களிடமிருந்து கூட 'இவ எப்படி



படிப்பகம்

www.padippakam.com

நடந்துகிட்டிருப்பாளோ' என்பது போன்ற சொற்களைக் கேட்க நேரிடுகிறது. புகார் செய்யும் பெண் கூட்டத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுகிறாள். விசாரணையும் நீண்டநாள் இழுத்தடிக்கப்படுகிறது.

வேலையிடங்களில் பெண்களுக்குப் பாலியல் தொந்தரவுகள் வராமல் இருக்க வேண்டுமென்றால் முதலில் பெண்களுக்கு எதைச் சகித்துக் கொள்ள வேண்டும். எதை எதிர்க்க வேண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பணியிடங்களில் பரஸ்பர மரியாதையுடன் ஆண், பெண் வேலை செய்ய ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் பெண்களை நடத்தும்விதம் மாறுபட்டால் மட்டுமே சமூக மாற்றம் ஏற்படும். அதுவரைச் சட்டங்களை மட்டும் நம்பி பெண்கள் பாதுகாப்பாக உணர மாட்டார்கள்.

– சாம்பவி

## ஒரு தாயின் புலம்பல்

கண்ணே! கண்ணுறங்கு
என் தின்னுயிரே கண்ணுறங்கு
என் மணி வயிற்று தொட்டிலிலே
உன் மனம் மகிழ்ந்து கண் உறங்கு.

பெண் பெருமை பேசிடுவார்
மேடையிலே
பின் பித்தரைப் போல்
பிதற்றிடுவார் வீட்டினிலே
கண்ணே! கண் உறங்கு.

நான் சுமந்த
தங்க நகை
போதாத காரணத்தால்
குற்றவாளி என்று என்னை
குடும்பத்தில் ஒதுக்கிவிட்டார்
கண்ணே! நீ உறங்கு.

அடி மாடாய் உன்னை
ஆறாத புண்ணோடு
ஆராரோப்... பாடுகின்றேன்
அன்னமே! நீ உறங்கு

பெண்ணாய் இருப்பதனால்
பிழைக்க வழி கூறாது
கள்ளிப் பால்
நெல் மணிதான்
கண் உனக்கு காணிக்கைகள்.

உன்னை
என் கைகள் தழுவும் முன்னே
உன்னை மரணம்
கைத் தழுவும்
தூலியில் உனையிட்டு
தூங்க வைக்க
எனக்கோ நேரமில்லை
தூயவளே! என் வயிற்றில்
சுகமாக நீயுறங்கு.

உன்னைப் பிரிந்த–நானும்
என்னைப் பிரிந்த நீயும்
இவ்வுலகத்தில்
இல்லாதுப் போனாலும்
என்றேனும் சந்திப்போம்!
கருவறையில்
கல்லறை
சமைத்திடும்
சழக்கர்களை
சாடிடுவோம்!

பெண்ணின் பெருமைதனை
பேச்சோடு நிறுத்தாது
செயல்பட வைத்திடுவோம்
வாச மல்லிகையே
என் வசந்தமே நீ யுறங்கு!

– *பிரேமா*



படிப்பகம்

www.padippakam.com

# மாதேஸ்வரன் மலையின் கண்ணீர் துளிகள்

சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பது, அதற்காக சிறப்பு காவல் படை அமைப்பது, அதிரடிப்படை அனுப்புவது, வீரப்பன் காட்டிலிருந்து கேசட் அனுப்புவது, இறுதியாக நடிகர் ராஜ்குமார் வீரப்பன் பிடியில் இருந்தபோது அவரை மீட்க அரசு சார்பில் பல்வேறு துறைகளை சார்ந்த வல்லுநர்களை அனுப்புவது என வீரப்பன் தொடர்பான செய்திகள் எங்கெங்கும் வெளியாகி மக்கள் அனைவர் கவனத்திற்கும் வந்தவை. ஆனால், வீரப்பன் இருப்பதாக நம்பப்படும் காட்டு பகுதியை ஒட்டிய கிராமங்களில் வசிக்கும் மக்களிடம் வித்தியாசமான நம்ப சிரமம் மிகுந்த மன வேதனை தரும் உண்மை கதைகள் பல உள்ளன. இவை பொதுமக்கள் கவனத்திற்கு வருவதே இல்லை. கமிசன் ஏற்படுத்தப்பட்டு இக்கமிசன்முன் வீரப்பனை பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படை காவலர்களால் நினைத்துப்பார்க்கவே முடியாத கொடூரமான வன்முறைக்கும், படுகொலைக்கும், வன்புணர்ச்சிக்கும் ஆளாகிய பல்வேறு பெண்கள் அளித்த வாக்குமூலங்களைப் பற்றிய செய்திகள் பரவலாக செய்தித்தாள்களில் வந்தன. உண்மை என்னவென்றால் ஒரு வருடத்திற்கு முன்பே சதாசிவம் கமிசன் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் விசாரணை நடத்தி கொண்டிருக்கையில் கர்நாடகா காவல்துறையை சார்ந்த காவல் அதிகாரி ஒருவர் தற்காலிக தடை உத்தரவு பெற்றதனால், இக்கமிசனின் விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது. இப்பொழுது தடை உத்தரவு நீங்கி மீண்டும் விசாரணையை துவக்கியுள்ளது சதாசிவம் கமிசன்.

கமிசன் முன் வாக்குமூலம் அளிக்க பாதிக்கப்பட்ட மக்கள் பயந்து பின்வாங்கும்போது, அவர்களை மனித உரிமை அமைப்புகளின் முயற்சியினால் ஊக்கப்படுத்தப்பட்டனர்.

இதன்பின் பல்வேறு வயது பெண்கள் கூட்டம் கூட்டமாக கமிசன்முன் ஆஜராகி வாக்குமூலம் அளித்தனர். கண் முன்னால் கணவன் அடித்து சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டதை, தந்தை சித்ரவதை செய்து கொல்லப்பட்டதை, தாயார் வன்புணர்ச்சிக்கு ஆளானதை கண்டு மனமொடிந்து போன நடைபிணமான பெண்கள் வரிசையில் காத்திருந்து சதாசிவம் கமிசன்முன் வாக்குமூலம் அளித்தது காண்போரையும், கேட்போரையும் அதிர்ச்சிக்கும் மன அழுத்தத்திற்கும் ஆளாக்கிய காட்சி ஆகும்.

இம்மக்களில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் அனைத்தும் விளாவாரியாக, அதிரடிப்படையா? அட்டூழியப் படையா? என்ற பெயரில் பழ. நெடுமாறன் தலைமையிலான மக்கள் உரிமை கூட்டமைப்பு வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

வாச்சாத்தியிலும், சின்னாம்பதியிலும் இதேபோன்று அதிரடி படையினர் சுட்டுக்கொலை, வன்புணர்ச்சி இதர அத்துமீறல்கள் செய்திருப்பதற்கு ஆதாரமாக மக்கள் சிவில்



படிப்பகம்

www.padippakam.com

உரிமைக்கழகம் அளித்த அறிக்கை ஆதாரப்பூர்வமாக அளிக்கப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எவ்வித நீதியும் கிடைக்காததோடு, குற்றவாளிகளும் தண்டனையின்றி உலா வருகின்றனர்.

அதேபோல், தற்போது மாதேஸ்வரன் மலைப்பகுதி வாழ் மக்கள் குறைகளை விசாரிக்கும் சதாசிவ கமிசன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குமா?

மாதேஸ்வரன் மலைப்பகுதி மக்கள் பெண்கள் மீதான வன்முறைக்கெதிரான குழு விற்கு கொடுத்த நேர்காணலை இனி பார்ப்போம்!

**லக்கம்பட்டி மணி**

எங்கள் குடும்பத்தில் மூன்று பெண்கள். என் மாமியார், என் மச்சான் மனைவி, நான். மூவரும் ஒரே வீட்டின் ஒரே கட்டிலில் வைத்து தாலியறுத்தோம். வீரப்பனுக்கு உதவி செய்வதாக என் மாமனார், மைத்துனர், என் கணவர் மூவரையும் பிடித்துப்போய் விசாரிப்பதாகச் சொல்லி மாதேஸ்வரன் மலையில் வைத்து சித்ரவதை செய்து கொன்றே போட்டு விட்டார்கள். இன்றைக்கும் சொற்ப கூலிக்கு வேலைப்பார்த்து பிள்ளைகளுக்கு சோறு போட்டு வளர்க்கவே கஷ்டம். இதில் என் மகளுக்கு டி.பி. வேறு. எதை சாப்பிட்டு, எதை மிச்சம் பிடித்து, நான் வைத்தியம் பார்ப்பது?

**தங்கம்மாள்**

என்னைக் கொண்டுபோய் மாதக்கணக்கில் முகாமில் அடைத்து வைத்தார்கள். குளிக்கவோ, துணி மாற்றவோ அனுமதிக்கவில்லை. பின்பு அய்யா வந்தபோது என்னை ஆற்றில் குளித்துவிட்டு வர அனுமதித்தார். மாற்றத்துணி கொடுத்தால் நான் ஓடிப்போய் விடுவேனாம். அதற்காக குளித்துவிட்டு மீண்டும் முகாம் வந்து சேரும்வரை என்னை நிர்வாணமாகவே அழைத்து வந்தார்கள். அதன்பிறகுதான் அய்யாவை நான் பார்த்தேன். நீ சொல்லு, யார் யாரெல்லாம் வீரப்பனுக்கு உதவி செஞ்சாங்கன்னு சொல்லு. உன்னை போக விட்டுடறேன். உனக்கு கடைப்போட்டுத் தாரேன். இப்படியெல்லாம் ஆசைக்காட்டி அந்த அய்யாவே என்னை பலாத்காரம் செய்தார். என் கண் முன்னால் பலபேர் சொல்ல முடியாத சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டு உயிரிழந்தார்கள்.

**மணி**

எங்க வீட்டுக்காரர் லாரி ஓட்டுபவர். வீரப்பனுக்கு பொருட்கள் சப்ளை செய்வதாகச் சொல்லி அவரை பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். அவரை மாதேஸ்வரம் மலை வொர்க் ஷாப் என்றழைக்கப்படும் சித்ரவதை முகாமுக்கு கொண்டு போனதையறிந்து, அங்கே போய் அவரை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினேன். என்னையும் பிடித்து உள்ளே வைத்து விட்டார்கள். அங்கே அக்கம்பக்கத்து ஊரைச் சேர்ந்த பலரும் சித்ரவதை செய்யப்படுவதைப் பார்த்தேன். மதி புருஷன் கிருஷ்ணன் நல்ல செவத்த ஆளு. அவரை நிக்கவச்சு, ஜன்னலில் கை, காலை கட்டிவைத்து தீப்பந்தத்தால் உடல் முழுவதுமாக சுட்டார்கள். கொஞ்சம் நேரம்தான் அந்த ஆள் ஐயோ ஐயோ என்று கத்தினார். சிறிது நேரத்தில் அவர் சத்தமெல்லாம் அடங்கி விட்டது. ஆனால் அவர் சாகவில்லை. சதையெல்லாம் அழுகி, நாறி நீராய் கொட்ட, பல நாள்வரை அவர் உயிரோடிருந்தார். அவரைத்தான் அடித்து உதைத்து கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்தி வரச் சொல்வார்கள். அவர் உடம்பிலிருந்து ரண



படிப்பகம்

www.padippakam.com

சொட்டும். என்னத்தான் அடித்து உதைத்தாலும் அந்த தண்ணீரை நான் குடிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டேன்.

**சிவகாமி**

நான் கல்யாணம் செய்துக்கொண்டு ஊருக்கு வந்த அன்றே அதிரடி போலீஸ் வந்து என் வீட்டுக்காரரை கூட்டிட்டுப் போனாங்க. என் வீட்டுக்காரர் எந்த தப்பும் செய்யலையே, ஏன் கூட்டிட்டுப் போறீங்கன்னு கேட்டேன். ஒன்னுமில்லை, சும்மா அவர்கிட்ட வழி கேட்கணும் ன்னு சொல்லித்தான் கூட்டிட்டுப் போனாங்க. ஆனா உங்க வீட்டுக்காரரை யாரோ சுட்டுட்டாங்கன்னு ஆள் வந்து சொன்னாங்க. நான் தாலி கட்டினதிலிருந்து ஒரு நாள்கூட அவர்கூட இருக்கலீங்க.

**முருகேசன்**

எங்க தாத்தா, எங்க அப்பா, எங்க சித்தப்பா மூணு பேரையும் மாதேஸ்வரம் மலைக்கு கொண்டுபோய் சித்ரவதை பண்ணினார்கள். என்னையும், என் தங்கச்சியையும் நிக்க வச்சு பின்னால கையை கட்டி, நிர்வாணமாக்கி காது ஒட்டையில ஹேர்பின்னை மாட்டி தண்ணி ஊத்தி ஷாக் கொடுத்தாங்க. அப்ப நான் சின்ன பையன். என் தங்கச்சி என்னைவிட ரொம்ப சின்னது. கரண்ட் ஷாக் வைக்கிறவங்க நடு நடுவுல நிறுத்தி உங்க அப்பாவை சுட்டுடலாமா? வேண்டாமா? என்று அடிக்கடி கேட்பாங்க. வேண்டாம்னு சொன்னா ஷாக் வைப்பாங்க. அதனால, வலி பொறுக்க முடியாம சுட்டுடலாம்னு நான் சொல்லிட்டேன். என் அம்மாவுக்கு மட்டும் என்ன புரிஞ்சுதோ தெரியல, திடீர்ன்னு ஒருநாள் கம்மல் மூக்குத்தியெல்லாம் கழட்டிக் கொடுத்து, இத வித்து வயிறாற யாருக்காவது சாப்பாடு போடுங்கன்னு சொல்லி அழுதாங்க. அதுக்கப்புறம் அவங்க பேசவேயில்லை. ஆனா அன்னிக்குத்தான் எங்கப்பா செத்துட்டதா அப்புறமா தெரிஞ்சுது.

## *வாசகர் கடிதம்*

*நவ-டிச* 2001 "பெண் உரிமை" இதழில் "தெலங்கானா இயக்கத்தில் பெண்கள்" மற்றும் "புரட்சியையே உயிர்மூச்சாக்கிய கியூஜின்" என்ற இரு தலைப்புகளில் உள்ள செய்தியைப் படித்தேன். நேரில் கலந்து கொண்ட அனுபவம் கிடைத்தது. அதுமட்டுமா? அமைப்பின் தோற்றம், பின்னணி, நோக்கம் யாவும் அறிந்தேன். இந்தச் செய்தியை வெளியிட்ட ஆசிரியருக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*ஜன-பிப்* 2002 'பெண் உரிமை' இதழில் 'பொடோ' கட்டுரை போலீஸ் அராஜகத்தை துகிலுரித்து காட்டியது மிக சிறப்பாக இருந்தது. பாலியல் வன்முறை ஒரு அடக்குமுறை கட்டுரை பெண்களின் பாலியல் கொடுமைகளை அக்குவேறு ஆணிவேறாக பிரித்து காட்டிய விதம் சிறப்பாக இருந்தது.

பெருகிவரும் பாலியல் வன்முறை நேர்கானல் கட்டுரை ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் புதைந்து கிடக்கும் உணர்வுகளை காட்டியது. இந்த கேடுகெட்ட அரசாங்கத்திற்கு உரைப்பதுபோல் இருக்கிறது. தெலுங்கானா இயக்க பெண்கள் கட்டுரை தன்னம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது. – *விஜி. அனாமிகா*



படிப்பகம்

www.padippakam.com

# அருந்ததிக்கு நேர்ந்த கொடூரம்!



மார்ச் 6–ம் தேதியன்று அருந்ததிராயின் மீதான உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தீர்ப்பு வெளியானது. அவர் ஒரு பெண் எனும் காரணத்தை மனதில் கொண்டு அவருக்கு குறைந்தபட்ச தண்டனை அளிக்கப்படுகிறது என்றும், உச்சநீதிமன்ற அவமதிப்பு தண்டனையாக ஒருநாள் சிறைவாசத்துடன் கூடிய ரூ. 200/– அபராதமும் கட்டவேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இச்செய்தி அனைத்துத் தரப்பட்ட செய்தி தகவல் ஊடகங்களில் பெருத்த சச்சரவை உருவாக்கியது. பல்வேறு தரப்பட்ட தலைவர்களும், செய்தி தகவல் ஊடகங்களில் பிரபலப்பட்டோரும் இதனைக் கண்டித்துக் குரல் எழுப்பினர்.

அருந்ததிராய், பிரபல புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர். நர்மதா அணைக்கட்டுக்கு எதிரான போராட்டக்குழுவுக்கு ஆதரவாக சில போராட்டங்களில் பங்கு ஏற்பதும், நர்மதா அணைக்கட்டுக்கு எதிராக உலகளவில் ஆதரவு திரட்டுவதிலும் பங்கேற்றுள்ளார் என்பது நாம் அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. தனது எழுத்துக்கள் மூலம் நர்மதா அணைக்கட்டினால் பயனடைபவர்கள் குஜராத்தை சார்ந்த சர்க்கரை ஆலை முதலாளியான சனத் மேத்தா மற்றும் குஜராத்தின் பண்டைய முதலமைச்சர் சிமன்பாய் படேல் போன்றவர்கள்தாம் என அம்பலப்படுத்திக் காட்டியதில் இவர் பங்கை நாம் மறுக்க இயலாது. இவ் வளர்ச்சிப்பணியானது பல்லாயிரம் மக்களை இடம்பெயரச் செய்து அவர்களின் அழிவுமீது எழுப்பப்படும் திட்டம் என்பதைத் தெளிவுபடுத்தி எழுதியுள்ளார். இவரது எழுத்துக்கள் போராட்டத்திற்கு நல்ல ஆதரவைத் திரட்டியது என்பதில் ஐயம் ஏதுமில்லை.

இதற்கிடையே, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், உச்சநீதிமன்றம் குஜராத் மாநிலத்திற்கு சாதகமான நர்மதா அணைக்கட்டு பகுதி மக்களை இடம் பெயர்தலுக்கு வழிகோலும் வகையில் தனது தீர்ப்பை வெளியிட்டது. இத்தீர்ப்பின்படி



படிப்பகம்

www.padippakam.com

நர்மதா அணைக்கட்டு திட்டம் கட்டப்படுவது தடுக்கப்படக்கூடாது என்றும், அணைக்கட்டு கட்டப்படுவதினால் இடம் பெயரும் மக்களுக்கான இழப்பீட்டை மத்திய பிரதேச மாநில அரசு சரியாக கவனிக்கவில்லை என்றும் குறிப்பிட்டது. மத்திய பிரதேச மாநில அரசு மக்களுக்கு பிரித்து கொடுக்க தனது கைவசம் நிலம் எதுவும் இல்லை என முன்வைத்த வாதம் கணக்கில் கொள்ளப்படவில்லை. இதற்கு எதிராக, மக்களுக்கான இழப்பீட்டை உத்திரவாதம் செய்யாமல் முன்வைக்கப்பட்ட தீர்ப்பை நிராகரித்து போராட்டக்குழுவுடன் இணைந்து அருந்ததிராய் எழுத்துக்கள் மூலம் முன் வைத்தார். இது குறித்து, அவுட்லுக் மற்றும் பிரண்ட்லுக் பத்திரிகையில் எழுத்து மூலம் பிரசுரித்தார். உச்சநீதிமன்றம் இந்தக் கட்டுரைகள் குறித்து ஆய்ந்து, இவை உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும்படி இருந்ததாகவும் அதனை தாம் மன்னித்து விட்டுவிடுவதாகவும் தீர்ப்பு வழங்கியது.

உச்சநீதி மன்றத்தின் அணைக்கட்டு திட்டத்திற்கு ஏதுவான தீர்ப்பை எதிர்த்து நர்மதா போராட்டக்குழு உச்சநீதிமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. அதில் பங்கேற்றவர்களுக்கு எதிராக வழக்கறிஞர்கள் நால்வர், மேதா பட்கர், பிரசாந்த் பூஷண் மற்றும் அருந்ததிராய்க்கு எதிராக காவல்துறையில் புகார் கொடுத்தனர். புகார் கொடுக்கப்பட்டது முறைகேடாக இருந்த காரணத்தால் இது காவல்துறையினரால் கணக்கில் கொள்ளப்படவில்லை. பின்னர் இவ்வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த ருமா பால் என்ற நீதிபதியும், பட்நாயக் என்ற நீதிபதியும் வழக்கு தாக்கல் செய்த வழக்கறிஞர்கள் மனுவில் ஒப்பிடாமல் நீதிமன்ற registry-இல் பதிவு செய்யப்படாமல் கட்டானி ஜெனரல் ஒப்புதல் பெறப்படாமல் கொணரப்பட்ட மனுவை கண்டித்து நிராகரித்தனர். அதே நேரத்தில் தனது பதிலுரையில் அருந்ததிராய் எழுதியிருந்த மூன்று பாராவினை சுட்டிக்காட்டி, அவை உச்சநீதிமன்றத்தை அவமதித்ததாக கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என Sno Motto வழக்கு எடுத்தனர். தனது பதிலுரையின் இப்பகுதியில் அருந்ததிராய் அவர்கள், "டெஹல்கா மோசடியை விசாரிக்க தனி நீதிபதியை அளிக்க முன்வராத நீதிமன்றம், உச்சநீதிமன்ற அணைக்கட்டுதலுக்கான உத்தரவை எதிர்த்து அரசாங்க கொள்கைகளை வெளிப்படையாக எதிர்ப்பவர்களின் பிரச்சனை எழும்போது நிரூபிக்கப்படாத வெறுக்கத்தக்க மனுவை விசாரிக்க தனது அதிகபட்ச ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

இது உச்சநீதி மன்றம் தனக்கு எதிரான விமர்சனங்களை நொறுக்கி, அதனுடன் ஒத்த கருத்து கொண்டிராதவர்களை மிரட்டுவதான தனி ஆர்வமாகவே தெரிகிறது. இதனை வட்டார அளவிலான காவல்துறை எடுத்துக்கொள்ளத் தயங்கும். முதல் தகவல் அறிக்கை எடுத்துக் கொள்வதன் மூலம் உச்சநீதிமன்றம் தன்னை தரம் தாழ்த்திக் கொள்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார். இந்தப் பகுதி உச்சநீதிமன்றத்தின் பெருமையை பாதித்துவிட்டதான கருத்தை முன்வைத்து வழக்கு தொடரப்பட்டது. இந்த அவமதிப்பு வழக்கில்தான் மார்ச் 6 அன்று மேற்குறிப்பிட்ட தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளில் சேதி, பட்நாயக் என்பவர் அவமதிப்பு



படிப்பகம்

www.padippakam.com

வழக்கை பரிந்துரை செய்தவர் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். வழக்கில் ஒரு பக்கத்தை சார்ந்து நிற்பவர், வழக்கை தீர்மானிப்பவராக இருக்கக்கூடாது என்ற அடிப்படை நியதியும் இங்கு மீறப்பட்டுள்ளது. இவ்வாறு பல வழக்குமுறைகள் மீறி அருந்ததிராய் மீது உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டபோது, வழக்கின் தீர்ப்பு முன்னரே முடிவாகி விட்டிருந்தது என நாம் உணரமுடியும்.

இது பேச்சுரிமை மற்றும் நீதித்துறை அவமதிப்பு மீது நடவடிக்கைக்கான வலிமை என்ற இரண்டுக்கும் இடையிலான ஒரு எதிர்நிலைத் தன்மையை முன்னிறுத்தியுள்ளது. பேச்சுரிமை என்பது கட்டுப்படுத்த முடியாத அளவிலான சுதந்திரமா? அல்லது அதற்கான வரையறை நிர்ணயிக்கப்படுமா? அல்லது அவமதிப்பு மீதான நடவடிக்கைக்கான வலுவை நிகரில்லாமல் பயன்படுத்த இயலுமா என்ற கேள்விகள் எழும்புகின்றன.

பேச்சுரிமை என்பது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை உள்ளடக்கியது. மனிதகுல வளர்ச்சியில் கருத்துக்களை கட்டுப்படுத்த முயற்சிப்பது காலந்தொட்டு தொடர்ந்து வந்துள்ளது. அதனை ஏற்று செயல்பட்டிருந்தால் இன்றைய விஞ்ஞான பூர்வ வளர்ச்சியே நிலைத்து வந்திருக்க முடியாது. கலிலியோ, வான்கோள்கள் அனைத்தும் சூரியனை மையமாகக் கொண்டு சுழல்கின்றன என முன் வைத்த கருத்தின் காரணமாக மதவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானார் என்பதை நாம் நினைவு கூறவேண்டும். பிரெஞ்சு நாட்டின் எழுத்தாளர்கள் அந்நாடு அல்ஜீரியா மீது நடத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து வெளியிட்ட கருத்தை அந்நாட்டு நீதிமன்றங்கள் அங்கீகரித்து அவர்களை விடுவித்தது. வியட்நாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு போருக்கு எதிராக குரல் எழுப்பியவர்களில் ஒருவரான கிளிண்டன் அந்நாட்டு அதிபராக வரமுடிந்தது. ஆயின், இத்தகைய கருத்துக்களை மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியாவில் எதிர்பார்க்க இயலாது.

அருந்ததிராய் இந்தியாவின் கார்கில் போரை எதிர்த்து போராட்டங்களிலோ, வேறு ஏதேனும் தேசிய பிரச்சனைகள் குறித்து நேரடி நடவடிக்கையில் இறங்கி விடவில்லை.

அவர் மேற்கத்திய தனிநபர் சுதந்திரம் என்ற முதலாளித்துவ கோட்பாட்டு பண்பாட்டு வளர்ச்சியில் வளர்ந்து வந்தவர். இந்தியாவின் சமூக படிநிலைகளை அங்கீகரிக்கும் சாதிய கோட்பாட்டின் பண்பாட்டு ரீதியோ, தனிநபர் வழிபாட்டு சிந்தனையில் வளர்ந்து வரும் நம் நாட்டு சூழலில், "இந்தியாவே இந்திரா, இந்திராவே இந்தியா" என்பதும், கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடு, கட்சித் தலைவர்களுக்கு இடையிலான முரண்பாடாக கொடுக்கப்படும் போக்கை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இச்சூழலில் வளர்ந்து வரும் நம் நாட்டு நீதிபதிகளுக்கு நீதித்துறை மீதான அவமதிப்பு என்பது நீதிபதிகள் மீதான அவமதிப்பு என்று, சுருக்கிப் பார்ப்பதிலிருந்து தப்பிவிட முடியாது. இத்தகைய முதலாளித்துவ பண்பாட்டு நிலைக்கும் இடையிலான போராட்டத்தின் வெளிப்பாடாகவே இச்சிக்கலை கருத இயலும்.

சட்ட அடிப்படையில் பார்ப்போமானால், நீதிமன்ற அவமதிப்பு என குறிப்பிடும்போது, நீதிமன்றத்தின் முன்னிலையில் அவமதிப்பு, நீதி நடுநிலையாக செயல்படுவதில்



படிப்பகம்

www.padippakam.com

தலையீடு செய்யும் வகையில் இடைப்பட்ட (வழக்கின்) காலகட்டத்தில் அந்த நடுநிலைக்கு ஊறு விளையும் வண்ணம் செயல்படுவது மற்றும் நீதி வழங்கும் நிர்வாகத்தில் தலையீடு செய்வது அதன் ஒழுங்குணர்ச்சியை குலைப்பது என்பன அடங்கும். இவ்வனைத்தும் நீதித்துறைக்கு களங்கம் ஏற்படாத வண்ணம் இருப்பின் நீதித்துறை அவமதிப்புக்கான வலுவை பயன்படுத்த தேவை ஏற்படாது.

ஆயின் மல்கோன்கர் வழக்கு என்ற வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு வழங்கும்போது கிருஷ்ணய்யர், கைலாசம் போன்ற நீதிபதிகள் "நீதிமன்ற அவமதிப்பு மீதான நடவடிக்கைக்கான வலுவிற்கு ஆதரவாக குறிப்பிட வேண்டும் எனில், சில கட்டுபாட்டுடன் நீதிபதிகள் பயமின்றி, எந்த சக்திகளும் சட்டத்தின் முன்பு மக்கள் வெளிப்பாட்டின் முன்பு பெரும் சக்திவாய்ந்ததல்ல என்பதைச் சுட்டிக்காட்டவே, இந்த அவமதிப்பு நடவடிக்கை வலு தேவை" என குறிப்பிட்டுள்ளனர். "நீதித்துறை, விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. ஆயின், அந்த விமர்சனங்கள் உண்மையைத் திரித்து, தவறான அறிக்கை மூலம் நீதித்துறையின் மதிப்பை குறைபடுத்தி காண்பிக்கும் நோக்கத்துடன், மக்களுக்கு நீதித்துறை மீதான நம்பிக்கை இழக்கும் வண்ணம் செயல்பட்டால் அந்த வலுவை நாம் பயன்படுத்தலாம்" என குறிப்பிட்டுள்ளார்.

உச்சநீதிமன்றம் தாம் வரலாற்று ரீதியாக தனது வர்க்க நலன்களை பாதுகாக்கும் அங்கம் என்பதை நிரூபிப்பதில் எள்ளளவும் பிறழ்ந்துவிடவில்லை. சவஹர்லால் நேரு இந்திய பிரதமராக இருந்தபோது இதுபோன்ற ஒரு வழக்கில், நேருவிற்கு சட்டம் குறித்த போதிய அளவு அறிவு இல்லாத காரணத்தால், அறியாமையால் வெளிப்படுத்திய உணர்வுகளை மன்னித்து பெருந்தன்மையுடன் உச்சநீதிமன்றம் நடந்துகொண்டது. இதன்மூலம் அரசு இயந்திரங்களின் இரு தூண்களான பாராளுமன்றம், நீதித்துறைக்கு இடையில் உள்ள உறவில் பாதகம் ஏற்படாமல் காத்துக் கொண்டது. அதே காலகட்டத்தில் 'கம்யூனிச' கட்சி தலைவரான நம்பூதிரி பாட் அவர்களை நீதிமன்ற கூண்டில் ஏற்றி, அவரது தவறுதலான பார்வைக்கான கோளாறு அவரது மார்க்சிய பார்வையில் அடங்கியுள்ளதாக வெளிப்படுத்தி அதற்கான பெயரளவிலான தண்டனையாக ஒரு ரூபாய் கட்டணம் அபராதம் விதித்தது. பிந்தைய காலத்தில் சட்ட அமைச்சராக செயல்பட்ட சிவசங்கர் உச்சநீதிமன்றம் எவ்வாறு வர்க்க நலன்களை கட்டிக்காப்பதில் உறுதியாக செயல்பட்டு, சில சமயங்களில் பாராளுமன்றத்திற்கு சில சங்கடங்களை உருவாக்கும் அளவு செயல்படுகிறது என குறிப்பிடும் வண்ணம், "உச்சநீதிமன்றம் உயர்ந்த வர்க்கத்தை சார்ந்த நபர்களை கொண்டிருப்பதால் அவ்வர்க்க நலனுக்கான சமீன்தார்களுக்கான, தனது இரக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதன் விளைவாக, இழப்பீடு என அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 31–ல் குறிப்பிட்டதை பகுத்து பார்ப்பதில் அதன் உள்ளார்ந்த பொருளை உணரவில்லை.... இதன் காரணமாக சமீன்தாரி ஒழிப்பு திட்டம் பின்னடைவை எட்டியது" என குறிப்பிட்டார். இதனை ஆய்ந்த உச்சநீதிமன்றம் பெருந்தன்மையுடன் அவரை மன்னித்துவிட்டது.

இவ்வாறு தனது வர்க்க நலன்களை சார்ந்து நிற்பவர்களின் செயல்பாடுகள் மற்றும் பேச்சுக்கள் நீதிமன்ற அவமதிப்பாக இருப்பினும், அதனை பொறுத்துக் கொண்டு சமரசம் செய்து கட்டமைப்பை காப்பாற்றுவதில் வர்க்க சார்பு தன்மையை



படிப்பகம்

www.padippakam.com

நிலைநாட்டியது. ஆங்காங்கே சில தனி நபர்களின் புரட்சிகரமான தீர்ப்புகள் நீதிமன்றங்கள் மீதான மக்களது நம்பிக்கையின்மையை முற்றிப்போக விடாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தன.

மண்டல் கமிசன் வழக்கை விசாரிக்கும்போது அரசு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டவருக்கான 27% மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு 22.5% என்பது பற்றிய விவாதம் நீட்டிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பதவி உயர்வில் உள்ள இடஒதுக்கீடு மறுக்கப்பட்டது. தேர்தலின்போது கடைபிடிக்கப்படவேண்டிய, மத துவேஷங்கள் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தலாகாது, மீறினால் தேர்தல் தகுதியை இழப்பர் என்ற கோட்பாட்டை மீறிப் பிரச்சாரம் செய்த பால் தாக்கரே மீதான வழக்கில், "இந்துத்துவா என்பது இந்திய வாழ்நிலை முறை" என உச்சநீதிமன்றத்தில் கருத்து முன் வைக்கப்பட்டது. இவ்வாறு தனது வகுப்புவாதத் தன்மையை வெளிப்படுத்தி கொண்டது. (பால் தாக்கரே மீது 1993–ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் அவரை கைது செய்ய இயலாது என சட்ட அமைச்சர் ராம் ஜேத்மலானி, அது குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும்போது வெளியிட்ட கருத்தினைக் குறித்து உச்சநீதிமன்றம் தனது "வேதனையை" மட்டுமே வெளிப்படுத்தியது. குடியரசு தலைவர் கே.ஆர். நாராயணன், நீதிபதிகளின் நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர் பெயர் எதுவும் பரிந்துரைக்கப்படவில்லையே என தனது கருத்தை எழுதிக் கேட்டபோது, அப்போதைய நீதியரசர் ஆனந்த் அவ்வாறு பரிந்துரை செய்யும் தரம் உள்ளவர்களாக தலித்துகள் இல்லை என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

அதுமட்டுமல்ல, டெல்லியில் 2000–க்கும் மேலான சிறு தொழிற்சாலைகள் ஒரே தினத்தில் மூடப்பட்டு, 20 லட்சத்திற்கு மேல் வேலை வாய்ப்பு இழந்தனர். இதேபோன்று, செல்லுலார் தொலைபேசிக்கான அங்கீகாரம் வழங்குவதில், முக்தா பன்னா எண்ணெய் கிணறுகள் தனியாருக்கு (5000/– கோடி பெறுமானமுள்ள சொத்துக்களை) ரிலையன்ஸ்க்கு அனுமதி கொடுப்பதில், பால்கோ அலுமினிய கம்பெனியை அரசாங்கம் Sterlite கம்பெனிக்குத் தாரை வார்ப்பதில், வர்க்க நலன் பிறழாமல் நடந்துகொண்டது.

இவ்வாறாக, உச்சநீதிமன்றம், (நீதித்துறையே) தனது சாதி, மத, வர்க்க நலன்களை மீறிச் செயல்படுவதில்லை. உச்சநீதிமன்ற அவமதிப்பு என்பது வர்க்க, சாதி, மத நலன்களை மீறும்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. அருந்ததிராயின் செயல்பாடுகள், எழுத்துக்கள் இந்த கட்டமைப்புக்குள் அந்த வர்க்க நலன்களை கேள்விக்குட்படுத்தி விட்டதே இந்த அவமதிப்பு வழக்கின் தீர்ப்பாக வெளிப்படுகிறது.

நீதித்துறை மீதான அவமதிப்பு என்பது நீதிபதிகள் மீதான அவமதிப்பு என்று, சுருக்கிப் பார்ப்பதிலிருந்து தப்பிவிட முடியாது. இத்தகைய முதலாளித்துவ பண்பாட்டு நிலைக்கும், நிலப்பிரபுத்துவ, சாதிய பண்பாட்டு நிலைக்கும் இடையிலான போராட்டத்தின் வெளிப்பாடாகவே இச்சிக்கலைக் கருத இயலும்.

- ***வேழன்***



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைச் சட்டம்

ஏற்கனவே அமைச்சரவையில் ஒப்புதல் பெற்ற 'குடும்ப வன்முறை சட்டத்தை' நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதை எதிர்த்து இந்தியாவிலுள்ள பெண்கள் இயக்கங்கள் கிளர்ந்தெழுந்துள்ளன. உச்சநீதி மன்ற வழக்கறிஞரும், 'லாயர்ஸ் கலெக்டிவ்' பத்திரிகையின் ஆசிரியருமான இந்திரா ஜெய்சிங் முன்வைத்த சட்ட ஆலோசனைகளை நிராகரித்துவிட்டு ஆணாதிக்க வெறிப்பிடித்த பி.ஜே.பி. அரசு பெண்களுக்கெதிரான 'குடும்ப வன்முறைச் சட்டத்தை' கொண்டு வர உள்ளது. பெண்களுக்கு மிகவும் அபாயகரமான இச்சட்டத்தை எதிர்த்து, மார்ச் – 8, சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தன்று, பெண்கள் இயக்கங்கள் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் நடத்தின.

இச்சட்டம், கணவன், தன்னையோ, தன் கடமையையோ பாதுகாக்க மனைவியை அடித்தால், அது குடும்ப வன்முறையாகாது என்கின்றது. அதேபோல், வழக்கமாக மனைவியை அடிக்காமல், ஏதாவது ஒருநாள் 'கடுமையாக' அடித்தால், அது குடும்ப வன்முறையாகாது என்கின்றது இச்சட்டம். "பெண்களுக்கெதிரான குறிப்பான சில வன்முறைகளை சட்டப்பூர்வமாக்குகிறது" என்று பிளேவியா ஆக்னிஸ் கூறுகின்றார். மனைவியை அடித்து உயிரோடு கொன்றாலும், அது குடும்ப வன்முறையாகாது என்று இந்த ஆணாதிக்க வெறியர்கள் கூறுகின்றனர்! 'குடும்ப வன்முறை' குறித்த தெளிவான வரையறை விதிகளை வகுக்காமல் நீதிபதியின் புரிதலுக்கு, விருப்பத்திற்கு விட்டுள்ள இச்சட்டம் மனைவியை அடித்து உயிரோடு கொல்வதற்கு சட்டப்பூர்வ உரிமையை கொடுத்துள்ளது! கணவன் எவ்வித தண்டனையுமின்றி எவ்வித குற்ற உணர்வின்றி உலா வர வழிவகுத்துள்ளது! ஏற்கனவே 'குடும்ப வன்முறையால்' அல்லலுறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க அடிகோலாய் உள்ளது!

அதேபோல், குடும்பத்தில் மனரீதியாக, பாலியல் ரீதியாக மனைவி ஒடுக்கப்படுவதை எந்த இடத்திலும் கூற இச்சட்டம் மறுத்துள்ளது என்று அனைத்து பெண்கள் இயக்கங்கள் கொதித்தெழுகின்றனர். இந்திரா ஜெய்சிங் இச்சட்டத்தை விமர்சிக்கையில், குடும்ப வன்முறை குறித்து வழக்கு நீதிமன்றத்தில் கிடக்கையில், அப்பெண்ணிற்கான பொருளாதார தேவையை பற்றியோ, பாதுகாப்பாக தங்க இடம் பற்றியோ தெளிவாக குறிப்பிடவில்லை என்கின்றார். 'குடும்ப வன்முறை' வழக்கு பதிவு செய்துவிட்டால் பாதுகாப்பின்றி வீதியில் தான் வாழவேண்டும் என்று அஞ்சி, குடும்ப வன்முறைகளை வெளியில் சொல்லாமல், 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்' என்று குடும்ப சிறைக்குள் பெண்கள் சிக்குண்டு கிடக்க வேண்டும் என்று இந்தச் சட்டப்பிரிவு வலியுறுத்துகின்றது. இதன்மூலம் இந்த ஆணாதிக்க பிற்போக்கு நிலவுடமை சிந்தனையாளர்கள் பெண்ணடிமைத்தனத்தை கட்டிக் காக்கும் பிற்போக்கு குடும்ப அமைப்புகளை பேணிப் பாதுகாக்கின்றனர்.

இதுமட்டுமல்லாமல், நீதிபதி அவரின் விருப்பத்திற்கேற்ப பாதிக்கப்பட்ட பெண்ணை கொடுமைப்படுத்தியவனுடன் சேர்ந்து வாழ, கணவன் முன் வைத்து 'கவுன்சிலிங்'



படிப்பகம்

www.padippakam.com

செய்யலாம் என்கிறது இந்த 'குடும்ப வன்முறைச் சட்டம்' சேர்ந்து வாழ்வது என்பது பெண்ணின் விருப்பத்தின் அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர, நீதிமன்றம் எப்படி தீர்மானிக்க இயலும்? பெண்களுக்கான சுயவிருப்பத்தின் அடிப்படையில் முடிவெடுக்கவே முடியாது; பெண்ணென்பவள், கணவனால் துன்புறுத்தப்பட்டாலும், எத்துணை தனித்தன்மையும் இல்லாமல், கணவனிடம் சமரசம் செய்து வைக்கும் உரிமை நீதிபதிக்கு இருக்கிறது என்கிறது இச்சட்டம்! பெண் என்பவள் அடிமைப்பட்டே வாழ வேண்டும் என்பதைத் தானே சொல்ல வருகின்றது இச்சட்டம்.

ஏற்கனவே 1,42,000 குடும்ப வழக்குகள் நீதிமன்றத்தில் புரையோடிக் கிடப்பதாகவும் 10,000 திருமணமான பெண்களை பேட்டிக் கண்டதில் 56% பெண்கள் குறிப்பான சூழ்நிலையில் கணவனால் அடிக்கப்பட்டு வருவதாக 'அவுட்லுக்' விவரிக்கின்றது. இன்னமும் வெளியில் வராத பிரச்சனைகள் எத்தனையோ? எத்துணைச் சட்டங்கள் வந்தாலுமே, பெண்கள் பிரச்சனைகள் ஓயவில்லை. மாறாக, அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றது. அதிலும் இதுபோன்ற பிற்போக்கான சட்டம் வந்தால், இந்திய பெண்களின் நிலை என்னவாகும்?

யதார்த்த நிலை, இப்படியிருக்க குடும்ப வன்முறையை சட்டபூர்வமாக்கும் பெண்களுக்கெதிரான இச்சட்டத்தை முறியடிப்போம்! ஆணாதிக்கத்தை நிலைநிறுத்தும் இந்த குடும்ப வன்முறைச் சட்டத்திற்கு எதிராக அணித்திரள்வோம்! பெண்களின் உரிமைக்கான சமூக மாற்ற போராட்டப் பாதையில் அணித்திரள்வோம்!

*ஆசிரியர்*

## தர்மபுரி – கொளகத்தூரில் ஜாமீன்தார்கள் மிரட்டப்படுவதை முறியடிப்போம்!

1988–ம் ஆண்டு கல்பனா சுமதி என்ற ஆசிரியை கொடூரமாக எஸ்.ஐ. பாலசுப்ரமணியன் மற்றும் நான்கு காமக் கொடூரர்களால் பாலியல் வன்முறைக்கு இரையாக்கப்பட்டார். கல்பனா சுமதிக்கு நீதிக்கேட்டு தமிழ்நாடு பெண்ணுரிமைக்கழகம் நீதிக்கேட்டு கிருஷ்ணகிரி நீதிமன்ற வளாகத்திற்குள் 14 பெண்கள் இந்த காமுகர்களுக்கு செருப்பு மாலை போட்டு, துடப்பக்கட்டை பூசை செய்து நூதனப் போராட்டம் செய்தனர். இந்த 14 பெண்கள்மீது கொலை முயற்சி வழக்கு போட்டு தன் இனத்தைச் சேர்ந்த காம கொடூரர்களுக்கு துணையாய் இருந்தது தமிழக காவல்துறை! பெண்கள் விரோதப் போக்கை கண்டித்து நியாயம் கூறி 22 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டபோதும் தளராமல் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து தமிழக மக்களின் ஆதரவுடன் 14 பெண்கள் வெளிவந்தனர். இவ்விசயம் நம் அனைவருக்கும் தெரிந்ததே.

இவ்வழக்கு விசாரணைக்கு வரும் இத்தருணத்தில் நீதிகோரி போராடிய பெண்களுக்கு தர்மபுரி கொளகத்தூரிலிருந்த வந்த ஜாமீன்தாரர்களை கிருஷ்ணகிரி இன்ஸ்பெக்டர் மனோகரன், கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் ஏகநாதனின் துணையுடன் கடந்த ஒரு மாதமாக தினமும் கைது செய்வோம் என்று வீடுபுகுந்து மிரட்டி வருகின்றனர்.

கல்பனா சுமதியை கொடூரமாக சின்னாபின்னமாக்கிய காக்கிச்சட்டை காமுகர்களை தண்டிக்க வக்கற்ற இந்த காக்கிச்சட்டை கொடூரர்கள் அப்பாவி கொளகத்தூர் மக்களை மிரட்டி வரும் அராஜகத்தை முறியடிப்போம்!! – *ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# எதிரொலிப்பு

நண்பர்களே! இன்றைய பிற்போக்கு சீரழிவு சமூகத்தில் பெண்ணாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது என்பது தினசரி நிகழ்ச்சியாகி விட்டது! தாங்கள் சந்தித்த பிரச்சினைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கலாம். ஆனால் பல சமயங்கள் பகிர்ந்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல், மனதிற்குள்ளேயே புழுங்கிக்கொண்டு அவதிப்பட வேண்டியிருக்கும். ஆனால் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும், அதை தீர்க்க மேற்கொண்ட வழிகளையும் பகிர்ந்துக்கொள்ளும், உங்களுக்கான காலம்தான் எதிரொலிப்பு காலம்! உங்களுக்கான இந்த காலத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் கருணா என்பவரின் அனுபவ பகிர்வு இங்கு வெளியிடப்படுகிறது.

– ஆசிரியர்

என் பெயர் கருணா. நான் தொடர்ச்சியாக 'பெண் உரிமை' பத்திரிகை படிக்கின்றேன். பெண்கள் மீதான கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் இந்த சமூகத்தில் 'பெண் உரிமை' பத்திரிகை மிகவும் வரவேற்கத்தக்கது. 'பெண் உரிமை'யில் எதிரொலிப்பு பகுதி பார்த்த பிறகு என்னுடைய அனுபவங்களை பெண்களுடன் பகிர்ந்துக்கணும் என்று நினைத்தேன். இது நான் 10–ம் வகுப்பு முடிச்ச பிறகு நடந்த சம்பவம். பரிட்சை முடிச்சிட்டு லீவ்ல எங்க சித்தி ஊருக்கு போனேன். எங்க சித்திக்கு இரண்டு ஆம்பள பசங்க, ஒரு பொண்ணு, எனக்கு தங்கை. அப்பொ பிரண்ட் கருப்பா இருந்தாலும் அழகா இருக்கும். அதனால எங்க சித்தப்பா அவள் வயசுக்கு வராததுக்கு முன்னாடியிருந்தே சந்தேகப்பட்டு யாரோடயும் பேசவிடமாட்டார். நான் அங்கு இருக்கும்போதே (அது 8–வது முடிச்சு) அவள் வயசுக்கு வந்திருச்சி. அப்போதிலிருந்து அதோட வாழ்க்கையே மாறிப்போச்சு. சந்தேக பிசாசான எங்க சித்தப்பாவால் அவள் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

இந்த பிரச்சனைகள் பொறுத்துக்க முடியாமல் எங்க சித்தி அவ வயசுக்கு வந்த ரெண்டு மாதத்திலேயே நாங்க யார் சொல்லியும் கேட்காம என் தங்கைக்கு கல்யாணம் முடிவு பண்ணியிருக்காங்க. இதையொட்டி சித்தி சித்தப்பாவுக்கு இடையில் ஒரே சண்டை. யாருடைய சொந்தக்காரங்களுக்கு பொண்ண கொடுப்பது என்று அந்த பிஞ்சி மனசினுடைய வேதனையை யாருமே கண்டுக்கவே இல்லை. கடைசில எவனோ ஒருத்தனை முடிவு செய்து கல்யாணம் பண்ணிட்டாங்க என் தங்கைக்கு. அந்த ஆளும் பிடிக்கலே, கல்யாணமும் பிடிக்கல அப்படியும் கல்யாணம் முடிஞ்சிருச்சி.

கல்யாணம் முடிஞ்சி முதலிரவுக்கு எங்க சித்தி வீட்ல தனியா சின்னதா ஒரு ரூம் இருக்கு. முதலிரவு முடிஞ்சி காலையில் வீட்டில் ஏதோ ஒரு பெரிய பிரச்சனை நடந்த மாதிரி எல்லோரும் சோகமா, டென்ஷனா இருந்தாங்க. எல்லோரும் தங்கைய தனி தனியாக கூப்பிட்டு திட்றாங்க. அது அழுதுக்கிட்டே இருக்கு. மத்தியம் யாரும் இல்லாத நேரத்தில் என் தங்கை என்னிடம் வந்து அழுதா. உன்கிட்ட



படிப்பகம்

www.padippakam.com

பேசனும்னு ஏறிக்கரைக்கு கூப்பிட்டு போனா. என் மடியில் தலை வெச்சி ரொம்ப நேரம் அழுதிட்டிருந்தா. எனக்கு இந்த கல்யாணம் பிடிக்கலே. அவன் என்கிட்ட மோசமா நடந்துக்கறான். என்னை உன்னோட கூட்டிட்டு போன்னு சொன்னா. எனக்கு ஒண்ணும் புரியலை. நானும் அப்பொ சின்ன பொண்ணுதான். வயசுக்கு வந்தேனே தவிர ஒண்ணும் தெரியல. ஆனா அதுக்கு பிடிக்கலே என்ற கஷ்டம் மட்டும் புரிஞ்சிக்கிட்டேன். ஆனால் எப்படி ஆறுதல் சொல்றதுன்னு தெரியலை. அதோட சேர்ந்து நானும் அழுதுகிட்டிருந்தேன். அதுக்கு ஏதாவது உதவி செய்யணும்னு தோனிருச்சு. என் தங்கை சொன்னா அம்மாவுக்கு நீ சொல்லு நா இன்னிக்கு உன்னோடவே படுத்துக்கறேன் இல்லேன்னா செத்து போயிடலாமுன்னு எப்படியாவது நீ தான் சொல்லி அம்மாவ ஒத்துக்க வைக்கணும். சரி வான்னு வீட்டுக்கு கூப்பிட்டு வந்தேன். என் தங்கை எனக்கு ரொம்ப பிடிக்கும். அதுக்கு உதவி செய்யணும்னு மனசு துடியா துடிச்சது.

சொல்லி கூட்டிட்டு வந்தேனே தவிர சித்திக்கிட்ட இந்த விஷயத்தை எப்படி சொல்றதுன்னு தெரியலை. மனசு கஷ்டமாக இருந்தது. சாயந்திரம் சித்தி என்னை கூப்பிட்டு கேட்டாங்க. என்ன பேசினிங்கன்னு. தங்கை சொன்ன விசயங்களை சொன்னேன். அவ்வளவுதான் சித்தி பத்ரகாளி ஆயிட்டாங்க. தங்கையை கன்னாபின்னான்னு திட்ட ஆரம்பிச்சிட்டாங்க. நானும் சின்ன பொண்ணுதானே! பயமாயிடுச்சு. அழுகையை கட்டுப்படுத்திக்கிட்டே கேட்டேன். எனக்கு ஒண்ணும் புரியலை சித்தி. எனக்கு பயமாயிருக்கு எங்க ஊருக்கு அனுப்பிடுங்கன்னு சொன்னேன். சித்தி என்ன நெனச்சாங்கன்னு தெரியலை. நிதானமா என்ன பக்கத்தில உட்கார வெச்சிக்கிட்டு சொன்னாங்க.

அன்னிக்கு இரவு வாழ்க்கையில என்னால மறக்க முடியாததாயிடுச்சி. என் தங்கை அழுகையை யாரும் கண்டுக்காமல் மெரட்டி அனுப்பியிருக்காங்க. தங்கைக்கு பிடிக்காதத எல்லோரும் செய்றாங்கன்னு பெரியவங்க மேல் கோவத்தில அழுதுகிட்டே படுத்தேன் தூக்கம் வரல. தங்கை உள்ள போனாலும் சித்தி ரூமுக்கு வெளியே காவலுக்கு உட்கார்ந்தது எனக்கு மிகவும் வேதனையை கொடுத்தது. ஆனால், என்னால ஒண்ணும் பண்ண முடியலை.

கொஞ்சம் நேரம் கழிச்சு அவன் கத்தினான். அத்தே! என் பேச்சு கேக்கரதில்லைன்னு. உடனே சித்தி என்னை எழுப்பி வெளியில வான்னு கூட்டிட்டு வந்தாங்க. நா இந்த திண்ணையில் படுத்துக்கறேன் எனக்கு நெஞ்சு வலிக்கிதுன்னு நீ அவளை வெளியில கூப்பிட்டு சித்திக்கு நெஞ்சு வலிக்குது நீ அவர் சொன்ன பேச்சு கேக்கலைன்னா இறந்திடுவாங்கன்னு சொல்லுன்னாங்க.

நெஞ்சு வலின்ன உடனே நா பயந்து போயி சித்தப்பாவை எழுப்பறேன்னு சொன்னேன். வேண்டா நா சொன்னது மட்டும் செய்யுனு சொன்னாங்க.

அந்த நிமிஷத்தில என்னுடை மனநலம் வர்ணிக்க முடியாதது. அவளை வெளியில் கூப்பிட்டேன் வந்தா. அந்த இரவில அவ ஒடம்புல அவன் செய்த காயங்கள் எல்லாம் காட்டி தேம்பி, தேம்பி அழுதா. அந்த நேரத்தில இந்த வாழ்க்கை இவ்வளவு கொடூரமானதான்னு நெனச்சி ஸ்தம்பிச்சி போயிட்டேன். பிறகு சித்தி மெரட்டி



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பிவிட்டு ஏறத்தாழ விபச்சாரம் மாதிரி நடத்திட்டாங்க. போகும்போது அவ பார்த்த பார்வை நான் இன்னும் மறக்கவில்லை. இத்தனை வருஷம் கழிச்சி எழுதும்போது கூட என் கண்கள் கலங்கிக்கிட்டே இருக்குது. அதுவரை இந்த மாதிரி விஷயங்கள் கேள்விகூட படாத நான் இந்த சம்பவத்தால ரொம்ப ஆடிப்போயிட்டேன். உடனே வீட்டுக்கு திரும்பி வந்திட்டேன். எங்க அம்மாகிட்ட சொன்னேன். எங்க அம்மா ரொம்ப சகஜமா பொட்ட புள்ளைங்களுக்கு இது சகஜம்தான்னாங்க.

எங்களை இவ்வளவு காயப்படுத்திய இந்த சம்பவம் எல்லாருக்கும் எளிமையா ஏன் தெரியுதுன்னு அப்பொ எங்களுக்கு புரியலை. ஆனால், இது எனக்கே புரியாத அளவுக்கு மிகமிக ஆழமான காயத்தை என் மனதில் ஏற்படுத்தியது. அதுக்கு பிறகு பல ஆண்டுகள் பல காரணங்களால் தங்கையை பார்க்க முடியல. ஆனா, மாமியார் வீட்டில பிரச்சனை ஆயி சித்திகிட்டதா இருக்குன்னு கேள்விப்பட்டேன்.

அதற்கு பிறகு இதுவரைக்கும் இந்த சம்பவம் பற்றி யாருக்கும் சொல்லனும்னு தோணலை. 'பெண் உரிமை' படிச்ச பிறகுதான் எழுதனும்னு நெனச்சேன்.

கணவன், மனைவி உறவு என்பது ஒருவரை ஒருவர் புரிஞ்சிக்கிட்டு வாழத்தான். வெறும் உடல் உறவு மட்டும் இல்லை. ஆனால், இந்த நிலவுடமை, ஆணாதிக்க சமூகத்தில் எத்தனை பிஞ்சுக்கள் துயரப்படுகிறதோ! இதுகூட சமூக மாற்றத்தில் தானே மாறும்.

ஆனால், அன்பார்ந்த பெண்களே! பெற்றோர்களே! இதுபோன்ற தவறுகளை நாம நம்ம பொண்ணுங்களுக்கு செய்யாமல் இருந்தால் அதுவே அவர்களுக்கு பெரிய உதவி. ●

---

36–ம் பக்க தொடர்ச்சி

குஜராத்தில் நடந்தேறியவை. இவை, ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்ட தேசிய(?) அமைப்பென்று கூறப்படும் ஆர்.எஸ்.எஸ்.சின் சங்கபரிவாரங்கள் (வி.எச்.பி., பஜ்ரங்தள்) தலைமையேற்று, குஜராத் அரசின் உதவியோடு நடத்திய முஸ்லீம் இனப்படுகொலையின் நிகழ்ச்சி ஒரு சில காட்சிகள்.

ஆம்! இவை குஜராத் அரசின் திட்டமிட்ட தடைகளையும் மீறி வெளிவந்த ஒருசில விசயங்கள்தான். குஜராத்தில் இந்து பாசிஸ்ட்டுகள் இதைப் போன்ற ஆயிரக்கணக்கான கொடுமைகள், மனித தன்மை அற்ற இழிச் செயல்களை நடத்தி உள்ளனர்.

பாசிஸ்ட்டுகள் தமது மக்கள் அடித்தளத்தை விரிவுபடுத்திக் கொள்ளவும், சிறுபான்மையினரை அச்சுறுத்தி ஒடுக்கவும், மக்களின் வாழ்வாதார சிக்கல்களிலிருந்து திசை திருப்ப மக்களிடையே பிளவை உண்டாக்கவுமே, சிறுபான்மை முஸ்லீம்களுக்கு எதிரான இன ஒழிப்பைத் (genocide) திட்டமிட்டு தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். இந்த இன ஒழிப்பின் பகுதியாக சிறுபான்மை பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் ஈனத்தனமான வகையில் அரங்கேற்றப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

படுகொலைகள், சொத்து அழிப்புகள் சூறையாடல்கள் போலவே பாலியல் வன்முறைகளும் திட்டமிட்டே நடத்தப்படுகின்றன என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றை நடத்துவதற்காக ஆர்.எஸ்.எஸ். தனது உறுப்பினர்களை திட்டமிட்டு பயிற்றுவிக்கிறது. மேலும், சமூக விரோதிகள், குண்டர் கும்பல்களுக்கு பணம் கொடுத்து இத்தகைய செயல்களில் ஈடுபட வைக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன் வந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இரகசிய சுற்றறிக்கையில் முஸ்லீம் மற்றும் தாழ்த்தப்பட்ட பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. 1947லிருந்து இன்றுவரை நடைபெறும் ஒவ்வொரு மதக்கலவரத்திலும், இந்தப் படுகொலைகள், பாலியல் வன்முறைகள் சிறுபான்மையினருக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். கும்பலால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடூரங்கள் சிறுபான்மையினருக்கு எதிராக மட்டுமல்ல, 'இந்துக்கள்' என்றழைக்கப்படும் மக்களுக்கு எதிராகவும் கூட ஆர்.எஸ்.எஸ். கும்பலால் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. பிஹாரில் இந்துமதவெறி பாசிஸ்ட்டுகளின் பினாமி அமைப்பான ரன்வீர்சேனா, நிலமற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கூலி விவசாயிகளை எப்படி கொடூரமாக ஒடுக்குகிறது என்பதை அனைவரும் அறிவர். வயிற்றிலிருக்கும் குழந்தை வயிற்றை கிழித்து வெளியே எடுத்துக் கொல்வது, கூட்டுக் கற்பழிப்புகள், நிராயுதபாணியான பெண்களை மொத்தமாக எரிப்பது என ரன்வீர்சேனாவின் வெறியாட்டம் அனைவராலும் கண்டனம் செய்யப்பட்டது.

இந்திய ஆளும் கூட்டத்தின் மிகவும் பிற்போக்கான தீவிர ஏகாதிபத்திய அடிமைத்தனம் கொண்ட பகுதியினர்தான் இந்து பாசிஸ்ட்டுகள். இவர்களின் கொள்கைகள் மக்கள் விரோதமானவை மட்டுமல்ல, அனைத்து விசயங்களிலும் பிற்போக்கானவை. பார்ப்பனீயத்தையும், மனுதர்மத்தையும் உயர்த்திப் பிடிக்கும் இந்து பழமைவாதத்தின் உபவாசகர்களான இவர்கள், ஆணாதிக்கத்தை வெளிப்படையாகவே தூக்கிப் பிடிக்கின்றனர். 'பெண்கள் அசுத்தமானவர்கள்' என்று கூறும் மனுதர்மத்தை பூசிக்கும் இந்த காட்டுமிராண்டிகளின் ஆணாதிக்க வக்கிரத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடே திட்டமிட்ட பாலியல் கொடூரங்கள்.

படுகொலைகளோடு இணைந்த பாலியல் வன்முறைகளின் மூலம் தமக்கு அடங்கமறுக்கும் சிறுபான்மை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை கேவலப்படுத்தி, அவர்களின் மனஉறுதியைக் குலைத்து, நிரந்தர அச்சத்துடன் வாழுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும், தமது பிற்போக்கு மேலாதிக்க வெறியை தீர்த்துக் கொள்ளும் வடிகாலாக இவற்றைப் பயன்படுத்துகின்றனர். ஆர்.எஸ்.எஸ். மதவெறி போதனைகளால் மிருகங்களாக வளர்க்கப்படும் குண்டர் கும்பல், இத்தகைய கொடுமைகளை எவ்வித உறுத்தலுமின்றி செய்கிறது.

இன்று மையத்தில் ஆட்சிக்கு வந்துள்ள சங்கரிவார கும்பல், முன்னெப்போதையும் விட துணிச்சலாகவும், வெளிப்படையாகவும் தன் இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதர கட்சிகள் ஆண்ட போதே கூட, அவர்கள் இந்து மதவெறியர்களுடன் சமரசம் செய்து கொண்டதால், தனது குற்றங்களுக்காக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. இப்போது, தமது சொந்த ஆட்சியில் மனித குலத்துக்கே



படிப்பகம்

www.padippakam.com

விரோதமான குற்றங்களை அரசு உதவியுடனே செய்வதுடன், தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால், மேலும் பல படுகொலைகள் நடக்கும் என மிரட்டி வருகின்றனர்.

வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட மைய அமைச்சர்கள் இக்கொலைக்காரக் கும்பலை பாதுகாப்பதுடன், அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற பல்வேறு சதி நாடகங்களை நடத்தி வருகின்றனர். காஞ்சி சங்கராச்சாரி, சோ இராமசாமி, ஜெயலலிதா போன்ற பார்ப்பனீய கும்பல்கள் இந்தக் கொடூரங்களை நியாயப்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான பத்திரிகைகளும் கூட இந்துமதவெறிக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தூபம் போட்டு வருகின்றன. அரசு இயந்திரமும் கோவை முதல் குஜராத் வரை இந்து பாஸிட்டுகளின் பக்கமே நிற்கிறது. இப்படிப்பட்ட சூழலில், வரும் நாட்களில் இவர்களின் இனப்படுகொலையும், பாலியல் கொடூரங்களும் அதிகரிக்கவே செய்யும்.

எனவே, சிறுபான்மை பெண்களுக்கெதிரான இவர்களின் திட்டமிட்ட கொடூரங்களை எதிர்க்க வேண்டியது, பெண்கள் உட்பட அனைத்து மக்களின் அவசரக் கடமையாகும். அதுமட்டுமல்ல, முதலில் குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிராக தொடங்கும் பாசிஸ்ட்டுகளின் தாக்குதல்களும் கொடுமைகளும், நாளடைவில் போராடும் பெரும்பான்மை மக்களுக்கு எதிராக வந்து சேரும் என்ற உண்மை, உலக வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் கூட இன்று சிறுபான்மையினருக்கு எதிரான இந்த கொடூர வெறியாட்டங்கள், நாளை அனைத்து மக்களுக்கும் எதிராகத் திரும்பும். நாட்டை அந்நியருக்கு அடகு வைத்து மக்களைப் படுகுழியில் தள்ளும் இந்த கூட்டம், நாளை வாழ்க்கைக்காக போராடும் மக்களை சூறையாடும்!

மேலும், இந்து பார்ப்பனீய கும்பலின் ஆணாதிக்க வெறி சிறுபான்மை பெண்களுக்கு மிகவும் எதிரானதாகும். அவர்களை முழு அடிமைகளாக மாற்றுவதே இந்த மனுவாதிகளின் திட்டமாகும். எனவே குஜராத்தில் நடந்து கொண்டிருக்கும் இனப்படுகொலைகள், பாலியல் கொடுமைகளுக்கு எதிராக உரக்க குரல் கொடுப்போம்! இன ஒழிப்பு, பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட மற்றும் அதற்கு திட்டமிட்ட அவர்களை பாதுகாக்கும் அனைவரையும் கடுமையாக தண்டிக்கக் கோரி போராடுவோம்! தமிழகத்தில் இந்து மதவெறி பாசிஸ்ட்டுகளை அம்பலப்படுத்தி, அவர்களை முறியடிக்க அணித்திரள்வோம்! உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்காக பாடுபடுவோம்!

– *பாக்யா*

*தவிர்க்க முடியாத காரணத்தினால் தெலுங்கானா இயக்கப் பெண்கள் என்ற தொடர் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

– *ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# எங்கே பயணப்படுகிறது?

குஜராத்
எதை நோக்கிப் பயணப்படுகிறது?
நரபலிக்களத்தையா?
கல்லறைகளின் இருப்பிடத்தையா?
மனிதநலம் காப்பதை
காற்றில் பறக்கவிட்டு
ரத்தவெறி ஆடுவது தகுமா?
மதச்சார்பற்ற அரசு
ஆம்!
இசுலாம் 'மதம்'
சார்பற்ற மோடி அரசுதான்
குஜராத்!
ஆயிரம் ஆயிரம் உயிர்களை
சவக்குழியில் தள்ளியபின்பும்
அரசியலின் ரத்தவெறி
தணியவில்லையோ?
இன்று இந்து மதச் சார்பே
அரசு பதவிக்குத்
தகுதியாகி விட்டதோ?
அத்வானியும் மோடியும்
இணைந்து நடத்திய
இந்துமத வெறியாட்டத்தில்
ஆயிரம் முஸ்லீம் உயிர்கள்
மடிந்துபோனதுதான் மிச்சம்!
உயிர்சுமக்கும் கர்ப்பிணிகளின்
வயிற்றில் இறங்கியது அடி!
இந்தியாவின் முன்னேற்றப் பாதையில்
விழுந்து விட்டது இடி!
ரத்த ஆறு ஓடுகையிலும்
காம இச்சைத் தீர்த்துக்
கொண்ட மிருகங்கள்!
வி.எச்.பி. ஆர்.எஸ்.எஸ்.
வானரப் படைகள்!
முஸ்லீம் இனத்தையே
இல்லாமல் ஆக்கிவிட
முனையும் துடிப்புதான்
இந்த உயிர்ப்பலியாட்டம்!
அரசுடைமைகள் தனியார் வசமா?
வருமானத்துக்கும் அதிகமாக
சொத்துசேமிப்பா?
நடுத்தர மக்களுக்கு ஒத்துவராத
பட்ஜெட்டா?
என்பதற்கெல்லாம்
விடை சொல்லத் தெரியாத
அரசின் கையாலாகாத தனம்தான்
இந்த ரத்தவெறியாட்டம்.
பதவிக்கு ஆதாயம் தேடி
மதவெறியைத் தூண்டிவிடும்
அரசியலை முடக்கிவிட
இந்துமத பாசிச வெறிப்பிடித்த
அதிகார வர்க்கங்களின்
திட்டமிட்ட சதியினை முறியடித்திட,
கடவுளின் பெயரால்
முளைத்தெழும் தீவிரவாத முனைப்புகளை
முளையிலேயே கிள்ளியெறிந்திட
கல்லையும் மண்ணையும் கோபுரமாக்க
கொலை வெறியாட்டம் ஆடிடும்
ஈனப்பிறவிகளைச் சுட்டெரித்திட
ஒன்று திரள்வோம்!
போராட்ட பாதையில்
அணிவகுப்போம்!

- சண்முகி

Printed by S. Theesmas, Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane,
Royapettai, Chennai - 14. Tel : 8480357
Published and owned by P. Ajitha, 658(17/34) Rani Anna Nagar,
K.K. Nagar, Chennai - 78.
Printed at Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8480357
Published from 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.
Editor : P. Ajitha



படிப்பகம்

www.padippakam.com

Penn Urimai, 'Registered' TNTAM/2001/4002

# குஜராத் பெண்கள் மீதான இந்து பாஸிஸ்ட்டுகளின் பாலியல் கொடூரங்கள்



"பாதிக்கப்பட்ட பெண்கள் கூறிய விசயங்களை, நான் வாய்விட்டு சொல்ல இயலாது. அது பயங்கரமானது, மனித தன்மையற்றது. இதனால் நான் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளேன்"

குஜராத் சென்று வந்த தேசிய மனித உரிமை ஆணைய தலைவர் ஜே.எஸ். வர்மா ....

அருகில் ஓர் தாடி வைத்த வயதான மனிதர் மடியில் தனது மகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த குழந்தை நடுங்கிக் கொண்டு, தொடர்ச்சியான விம்மல்களுடன் தலைகுப்புற படுத்துக் கொண்டிருந்தது. அக்குழந்தைக்கு ஐந்து வயதிருக்கலாம். அவள் ஒரு கிழிந்து கறையாகிப் போன மஞ்சள் உடையை அணிந்திருந்தாள். அச்சட்டையை உயர்த்தி குழந்தையின் பின்பகுதியை அத்தந்தை காட்டினார். அப்பகுதி அடிபட்ட வீக்கங்களுடன் கோரமாக இருந்தது. பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டிருப்பது தெளிவாக தெரிந்தது. அவளுக்கு தேவதை போன்ற முகம்; கடும் அதிர்ச்சி அடைந்திருந்தாள். "என்னால் அவளை பேச வைக்க முடியவில்லை" என்று தந்தை கூறினார். "அவள் இனி எப்போதும் பேச மாட்டாள்" என தனது முப்பதாம் ஆண்டுகளிலிருந்த அமீனா என்ற பெண் கூறினார். "நான் ஓர் அழகான 20 வயது மகளைப் பெற்றிருந்த தாயை பார்த்தேன். அவள் தன் மகளை கற்பழிக்காமல் இருக்க இந்துக்களுக்கு பணம் தந்தாள். அவர்கள் பணத்தை எடுத்துக் கொண்டனர். அதன்பிறகு, 10 பேர் அப்பெண்ணை ஒருவர் மாறி ஒருவர் கற்பழித்தனர். அவள் கூட அதற்குபின் பேசுவதை நிறுத்திவிட்டாள். இறுதியாக அவளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை..."

***– டோம் மோரேஸ் என்ற மும்பை பத்திரிகையாளர் குஜராத் அகதி முகாம்களுக்கு சென்று வந்து – 24.3.2002 தி ஹிண்டு வில் எழுதிய கட்டுரையிலிருந்து.***

***நூற்றுக்கணக்கான கற்பழிப்புகள், கர்ப்பமான பெண்களின் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சுவது போன்ற பல சம்பவங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்ததாக – ப்ரண்ட் லைன் ஆங்கில ஏடு கூறுகிறது.***

மேற்கூறப்பட்ட சம்பவங்கள் ருவாண்டாவிலோ அல்லது ஹிட்லர் ஆட்சியின் கீழிருந்த ஜெர்மனியிலோ நடந்தவை அல்ல. புண்ணிய பூமி(?)யான 'பாரதத்தின்'

(இதன் தொடர்ச்சி 32ம் பக்கம்)

படிப்பகம்